Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU


முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 21 புதன்கிழமை (04.02.2015) பக்கங்கள் 20 ஓசை – 127

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

# தமிழர் விவகாரத்தில் அரசு விரைந்து செயற்படவில்லை

## பிஸ்வாலிடம் கூட்டமைப்பு முறையீடு





(கொழும்பு)

ஆட்சி மாற்றத்துக்காக தமிழர்கள் பெரும் பங்களிப்பு செய்துள்ள போதிலும் புதிய அரசு அசமந்தப் போக்குடன் செயற்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

புதிய அரசாங்கத்தை ஏற்படுத்த தமிழ் மக்கள் பாரிய நியாயமான பங்களிப்பு செய்துள்ள போதும் தமிழ் மக்கள் பிரச்சினை தீர்வு குறித்து அரசாங்கம் விரைந்து கவனம் செலுத்தவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவிடம் தெரிவித்துள்ளது.

கொழும்பு வந்துள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்கள உதவி செயலாளர் நிஷா பிஸ்வால் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்தார்.

கொழும்பிலுள்ள அமெரிக்க இல்லத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், வடக்கு முதலமைச்சர் சிவி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

அமெரிக்கா சார்பில் நிஷா பிஸ்வால் உள்ளிட்ட 6 பேர் கொண்ட குழு இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தேர்தலுக்குப் பின் இலங்கையின் நிலைமை, புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

100 நாள் வேலைத் திட்டத்தில் பல நல்ல விடயங்கள் செயற்படுத்தப்பட்டுள்ள போதும் வட, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கக்கூடிய

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழில் அதிகரிக்கும் வாள்வெட்டு; கட்டுப்படுத்த விசேட பொலிஸ் பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குள் இடம்பெறும் வாள் வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக, விசேட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவு ஒன்று செயற்பட்டு வருவதாகவும் அதன்மூலம் வாள்வெட்டு சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.ஆர்.பி.என்.பாலசூரிய, நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையப்

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்களின் அரசியல் உரிமையை மீட்டெடுக்கும் பயணம் தொடரும்

### தொகுதிவாரியாக குறைகேள் சந்திப்பு விரைவில்



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் காலங்களில் நாம் எமது கட்சியின் சின்னமாகிய வீணைச்சின்னத்திலேயே தேர்தலில் போட்டியிடுவோம் என்றும், வீணைக்கு வழங்கும் ஆணையே விடிவை தரும் என்ற மக்களின் நம்பிக்கைக்கு மேலும் உரமூட்டுங்கள் என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கட்சி முக்கியஸ்தர்களுடனான விசேட கலந்துரையாடலின் போது தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட தலைமைப் பணியகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்

19 ஆம் பக்கம் பார்க்க

## ரயிலுடன் மோதி விபத்து; உழவு இயந்திர சாரதி காயம்

(சாவகச்சேரி)

ஒளி, ஒலி சமிக்ஞையையும் மீறி மீசாலையில் புகையிரத கடவையை கடக்க முயன்ற உழவு இயந்திரத்தை யாழ்தேவி மோதியதில் அதன் சாரதி சிறு காயங்களுக்குள்ளாகி , சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக்காலை 7.45 மணியளவில் மீசாலை சந்தி புகையிரதக் கடவையில் சமிக்ஞை ஒலி, ஒளி எழுப்பப்பட்ட போதிலும் அனுமதியற்ற முறையில் மணலை கொண்டுசென்ற உழவு இயந்திரம் யாழ்தேவி புகையிரதத்தில் மோதுண்டு தூக்கி வீசப்பட்டது.

இதில் உழவு இயந்திரத்தை செலுத்திவந்த மந்துவில் கிழக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த சிதம்பரநாதன் மயூரன் என்பவரே

19 ஆம் பக்கம் பார்க்க

## இன்று இரவு தீபம் ஏற்றக் கோரிக்கை

(கொழும்பு)

தேசிய சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வகையில் சுதந்திர தினமான இன்று இரவு 9.30 மணிக்கும் 9.34 இற்கும் இடையான காலப்பகுதியில் வீட்டுக்கு முன்னால் தீபம் ஒன்றை ஏற்றுமாறு அரசாங்கம் கோரியுள்ளது.

இந்நாட்டிலுள்ள அனைத்து இன மற்றும் மத மக்களும் ஒன்றாக இணைந்து, எதிர்கால சந்ததியினருக்கு சுதந்திர

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனவர்களின் உறவுகள் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்



(வவுனியா)

வவுனியாவில் "நாங்கள்" இயக்கம் மற்றும் பிரஜைகள் குழு என்பவற்றின் ஏற்பாட்டில் காணாமற் போனோரின் உறவுகளின் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, நகரசபை மைதானத்தில் நேற்றுக் காலை 11.00 மணியளவில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இன்றைய தினம் 67 ஆவது சுதந்திர தினத்தை இலங்கை கொண்டாடவுள்ள நிலையில், "நாங்கள்" அமைப்பின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு பகுதியில் காணாமற் போனோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

காணாமற்போனோரை கண்டுபிடிக்கக் கோரியும், கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு

19 ஆம் பக்கம் பார்க்க

## தனியார்துறை ஊழியர்களுக்கும் விரைவில் சம்பள உயர்வு

### தொழில் அமைச்சர் நடவடிக்கை



(கொழும்பு)

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களுக்குக் கிடைத்த சம்பள உயர்வை தனியார் துறை ஊழியர்களுக்கும் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் முதலாளிமார் சங்கத்துடன் கலந்துரையாட தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

நீதி மற்றும் தொழில் அமைச்சர விஜேதாஸ ராஜபக்ஷ நேற்று முற்பகல் கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர், அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக்குப் பொருந்தும் வகையில் தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பதே தமது நோக்கம் என தெரிவித்துள்ளார்

இதேவேளை, தொழிலாளர் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளார்.

தொழிலாளர் சட்டத்தின் அநேகமான விடயங்கள் தற்காலத்திற்கு ஏற்புடையதாக இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையில், தொழிலாளர் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## சிறு விளம்பரம்

### பணிப் பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்பவர் தேவை. 45 - 55 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு : 0773413315 (C/3811)

### தவறிவிட்டது

திருநெல்வேலிக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடையில் ஒறேஞ் நிற ஆவணங்கள் அடங்கிய பை ஒன்று 02.02.2015 மாலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயதுசெய்து தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : 0772197776, 0718739573 R/396


# துடுப்பாட்டப் போட்டி

வேலணை பிரதேச விளையாட்டு விழாவில் ஆண்கள், பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளதாக வேலணைப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் ஜசிதரன் அறிவித்துள்ளார். (93)

# சமைத்த உணவுகளின் விலைகள் குறைக்கப்படுவது எப்போது?

(யாழ்ப்பாணம்)

சமைத்த உணவுகளின் விலைகளிலும் குறைவு ஏற்படுத்தப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ள போதிலும், யாழ்ப்பாணத்திலுள்ள பல பிரபலமான உணவகங்களில் இன்று வரை சமைத்த உணவுகளுக்கு விலைகள் எதுவும் குறைக்கப்படவில்லை.

புதிய வரவு-செலவுத் திட்ட அறிவிப்பில் உணவுப் பொருட்கள் மற்றும் எரிவாவு என்பவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள நிலையில் உணவகங்களில் சமைத்த உணவுகளுக்கான விலைகளில் மாற்றம் ஏற்படும் எனவும், தம்மால் அறிவிக்கப்படும் விலைகளுக்கு அதிகமான விலையில் நுகர்வோருக்கு சமைத்த உணவை விற்பனை செய்ய முடியாது என அறிவித்துள்ள நிலையிலும், யாழில் உள்ள மிக பிரபலமானதும், நீண்ட காலமாகவும் இயங்கி வரும் பல உணவகங்களில் கூடிய விலைக்கே சமைத்த உணவுப் பொதிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

இது குறித்து உரிய அதிகாரிகள் கவனமெடுத்து இந்த அதிக விலை விற்பனைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பலரும் தமது கோரிக்கைகையை வெளியிட்டுள்ளனர். (இ)

# புதிய விலைகள் நிர்ணயம் அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் அரசாங்கத்தால் விலைக் குறைப்புச் செய்யப்பட்ட பொருட்களிலும், அதனுடன் இணைந்த உணவு தயாரிப்புக்களிலும் புதிய விலைகளை நிர்ணயம் செய்வதற்காக அனைத்து உணவகங்களின் உரிமையாளர்களையும் மற்றும் பலசரக்கு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களையும் யாழ்.வணிகர் கழகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு, 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் சந்திக்க தீர்மானித்துள்ளது.

எனவே அனைத்து உணவகங்களின உரிமையாளர்கள் மற்றும பலசரக்கு வர்த்தகர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

# குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரத்தில் குடும்பப் பெண்ணின் சடலம் வயல் கிணற்றிலிருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

பெரியபுலவு, நெல்லியான், சுழிபுரத்தைச் சேர்ந்த மூன்று வயது பிள்ளையின் தாயான தினேஷ் சாருகா (வயது 22) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சமம்பவ இடத்திற்கு சென்ற மல்லாகம் பதில் நீதவான் தம்பிமுத்து மரண விசாரணை[illegible] பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, இறந்த பெண்ணின் கணவனை பொலிஸ் பாதுகாப்பில் வைக்க நீதவானால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (இ. 25)

# தீப்பிடித்தது பெற்றோல் கான் 3 பிள்ளைகளின் தந்தை படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பெற்றோல் கான் தீப்பிடித்ததில் எரிகாயங்களுக்கு இலக்கான மூன்று பிள்ளைகளின் தந்தை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தீர்த்தக்கரை, முல்லைத்தீவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான முத்துவேல் கண்ணன் (வயது-35) என்ற மீனவரே இவ்வாறு தீக்காயங்களுக்கு இலக்காகி முல்லைத்தீவு, மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவர் மீன்பிடித் தொழிலுக்காக அதிகாலையில் புறப்பட்ட வேளை விளக்கு தவறுதலாக பெற்றோல் கானில் பட்டதனால் இவ்விபத்து இடமபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# கால்பந்தாட்டப் போட்டி

(அராலி)

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டி கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மூன்றாம் கட்டத்திற்கான போட்டியில் அராலி பாரதி விளையாட்டுக்கழகம் அரா்லி திருமகள் விளையாட்டுக் கழகமும் [illegible]வுள்ளன.

முதலாம் கட்டத்திற்கான போட்டியில் மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகமும், இளவாலை ஜங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (93)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1132 | திகதி 02.02.2015

வெற்றி எண்கள்: 14 32 39 54 | ஆங்கில எழுத்து: H

ஜக்பொட் பரிசு ரூ. 1,22,22,640/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,22,22,640/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8 | 50,000/= | ரூ. 4,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 254 | 1,000/= | ரூ. 2,54,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 434 | 1,000/= | ரூ. 4,34,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11250 | 60/= | ரூ. 6,75,000/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5946 | 40/= | ரூ. 2,37,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 148019 | 20/= | ரூ. 29,60,380/= |
| ஆங்கில எழுத்து | 21461 | 20/= | ரூ. 4,29,220/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,390,440/=


எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 12,512,020/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.02.05 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3812)


# முன்பள்ளிக் கட்டடம் முகமாலையில் திறப்பு



முகமாலை கிராமத்திற்கு S.D.C. நிறுவனம் ஊடாக அமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடம் நாளை காலை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் முயற்சியால் கடந்த 2012.10.01 அன்று முகமாலையின் வடக்குப் பகுதியில் மீள் குடியேற்றம் நடைபெற்றது. அதன் பின்னர் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் ஊடாக மக்களுக்கான தற்காலிக வீடு, மலசலகூடம், பொது குடிநீர் வசதிகள், தற்காலிக பாடசாலை வீதி புனரமைப்பு போன்றவற்றுடன் வாழ்வாதார உதவிகளும் பெற்றுக் கொடுக்கப் பட்டன.

கடந்த வருடம் மார்ச் மாதம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் தற்காலிக வீடுகளுக்கு வடக்கின் வசந்த திட்டம் ஊடாக இலவச மின்சாரமும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து முகமாலை வடக்கில் குடியேறியுள்ள 100 வரையான குடும்பங்களில் 66 பேருக்கு S.D.C. நிறுவனத்தின் உதவியால் அமைக்கப்பட்ட வீடும், 23 பேருக்கு இந்தியன் வீடும் கிடைத்துள்ளது.

அத்துடன் இரண்டு வருடங்களுக்கு மேலாக தற்காலிக கொட்டிலில் இயங்கிய இளந்தென்றல் முன்பள்ளிக்கு S.D.C. நிறுவனம் 28 இலட்சம் ரூபா செலவில் முன்பள்ளிக்கான நிரந்தரக் கட்டடம் அமைத்துள்ளது (37)

# மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வரவு - செலவுத்திட்டம் அமையவில்லை

## குற்றம் சாட்டுகின்றது மாக்சிச லெனினிச கட்சி

(யாழ்ப்பாணம்)

புதிய அரசாங்கத்தினால் முனவைக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் மக்கள் எதிர்பார்ப்பிற்கு அமைய எரிபொருட்களுக்கு கொண்டுவரப்பட்ட விலைக்குறைப்புக்கு கூட அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு விலைகுறைப்புக்கள் இடம்பெறவில்லையென புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் இடைக் கால வரவு செலவுத் திட்டம் பற்றிய புதிய ஜனநாயக மாக்ஷிச லெனினிசக் கட்சியின் சார்பாக அதன் பொதுச் செயலாளா சி.கா.செந்தில்வேல் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்களுக்குக் கொடுத்த தேர்தல் காலவாக்குறுதிகளைச் சமாளிப்பதற்கும் அடுத்த பொதுத் தேர்தலை இலக்காகவும் கொண்டு தண்துடைப்பு விலைக்குறைப்புகளாகவே இவை. காணப்படுகின்றன. இது கூட 100 நாட்களுக்குரிய விலைக் குறைப்புகளா அல்லது அடுத்த வரவு செலவுத்திட்டம் வரையானதா என்பதும் கேள்விக் குறியாகவே காணப்படுகிறது.

எனவே, உழைக்கும் மக்களின் எதிர்பார்ப்பில் ஏமாற்றமே காணப்படுகிறது. இது இந்த அரசாங்கம் பின்பற்றி நிற்கும் நவ தாராள உலகமயமாதல் பொருளாதாரக் கொள்கைக்கான முன்னுரையாகவே அமைந்திருக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 14 இலட்சம் அரசாங்க ஊழியர்களுக்கு ரூபா 10000 இரண்டு கட்டங்களில் சம்பள உயர்வாக வழங்கப்பட்டிருப்பது அவர்களது வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பிற்கு ஓரளவு உதவக்கூடியதாகும். அதே வேளை நாட்டின் சுமார் 70 இலட்சம் தனியார்துறை தொழிலாளர்கள் ஊழியர்களுக்கு திட்ட வட்டமான சம்பள உயர்வு போது மானதாக அறிவிக்கப்படவில்லை.


சிறுதொகையான ரூபா 2500 மட்டுமே பெயரளவில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

இது அவாகளைத் திட்டமிட்டுக் கைவிட்டுள்ள மோசமான செயலாகும். இதன் மூலம் பல்தேசியக் கம்பனிகள், பெருவணிக நிறுவனங்கள், தனியார் கம்பனிகள் நிறுவனங்களின் அபட்டமான சுரண்டலுக்கு மைத்திரி - ரணில் அரசாங்கம் பச்சைக்கொடி காட்டி நிற்பதையே எடுத்துக்காட்டுகிறது.

அது மட்டுமன்றி சாதாரண உழைக்கும் மக்களின் அன்றாட உணவுப் பொருட்களான கோதுமை மா, சீனி, பருப்பு, மல்லி, நெத்தலி போன்றவற்றுக்கான விலைக் குறைப்பு என்பது ஒருவகை ஏமாற்றலேயாகும். அதேபோன்று நெல்லுக்கு உத்தரவாத விலையைக் கூட்டியுள்ள வரவு - செலவுத் திட்டம் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கவில்லை.

எனவே, கீழ் நடுத்தர வர்க்கத்தினருக்கும், மேல் நடுத்தர வர்க்கத்தினருக்கும் விலைக் குறைப்புக்கள், சம்பள உயர்வு என்பன ஆறுதல் வழங்கியுள்ள அளவிற்கு ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் வாழ்க்கைச் செலவின் சுமைக்குப் போதிய பரிகாரம் எதுவும் வழங்கப்படவில்லை. குறிப்பாக தனியார் நிறுவனங்களிலும், வர்த்தக வலயங்களிலும் இலட்சக் கணக்கான தொழிலாளர்களையும், ஊழியர்களையும் இவ் வரவு செலவுத்திட்டம் உதாசீனம் செய்துள்ளது என அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் உடுவில் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடந்த வருடம் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் செயலாளர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு முதலாவது உதவி மாவட்ட ஆளுநர் லயன் கிறிஸ்ரி நாணயக்கார பிரதம விருந்தினராகவும், வடக்கு லயன்ஸ் கழக ஆளுநர் சபைச் செயலாளர் லயன் ரி.உதயசூரியன், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

இதன் போது உடுவில் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கேடயம், மற்றும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மதுபான போத்தல்களுடன் இருவர் நெல்லியடியில் கைது



யாழ்.நெல்லியடி நகரப்பகுதியில் மதுபானப் போத்தல் மற்றும் பியர் ரின்களுடன் இருவரை நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமித்பெரேரா தலைமையிலான குழுவினர் நெல்லியடி நகரப்பகுதியில் சோதனை நடாத்தியபோது முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களில் 180 மில்லி லீற்றர் விஷேட சாராயம் 200 போத்தல்களும், 24 பீயர் ரின்களும் நெல்லியடியிலிருந்து வல்வெட்டித்துறை ஆதி கோவில் பகுதிக்கு கொண்டு சென்றபோதே இவ் இருவரையும் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்த இரண்டு சந்தேகநபர்களையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (18)

# ஆகாஷின் 'இலக்கு' குறும்படம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஆகாஷின் "இலக்கு" குறும்படம் கடந்த சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு வட்டுக்கோட்டை மண்டபத்தில் வைத்து வெளியிடப்பட்டது. ஆசிரியர் செ.நிஷாந்தன் தலைமையில் இடம்பெற்ற "இலக்கு" குறும்படம் வெளியீட்டு நிகழ்வில் பிரதமவிருந்தினராக மூத்த கலைஞர் மாணிக்கம் ஏரம்பு கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக ஈழத்தின் புகழ்பெற்ற இயக்குநர் ந.கேசவராஜன் கலந்து கொண்டார்.

"இலக்கு" குறும்படத்தை பிரதம விருந்தினர் மூத்த கலைஞர் மாணிக்கம் ஏரம்பு வெளியிட்டு வைக்க யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் சொலமன் பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.



குறும்படத்தின் விமர்சனத்தை ஆசிரியர் யோ.சித்தன் மேற்கொள்ள ஏற்புரையினை "இலக்கு" குறும்படத்தின் இயக்குநர் ஆகாஷ் நிகழ்த்தினார்.


இக் குறும்படத்தை தியாகு தயாரித்துள்ளதோடு இசையினை ஜீசசும், படத்தொகுப்பை சசிகரனும், மேற்கொண்டுள்ளனர்.

இளம் கலைஞனின் கலைப் பயணத்தில் பலர் கலந்து கொண்டு ஆதரவு கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (48)

# சிறந்த பாற்பண்ணையாளர் விருது வழங்கி கௌரவிப்பு

யாழ்.மாவட்டத்தின் சிறந்த பாற்பசுப் பண்ணையாளராக வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நாகேஸ்வரன் ரவி வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டு கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் விருதுகள் மற்றும் பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

வடக்கின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக, வடக்கு மாகாண விவசாய அமைச்சு ஆண்டுதோறும் தைப் பொங்கல் தினத்தையொட்டி உழவர் பெருவிழாவை நடாத்தி வருகிறது.



ரவி இதற்கு முன்னரும் 2012 ஆம் ஆண்டுக்கான யாழ். மாவட்டத்தின் சிறந்த கால்நடை வளர்ப்பாளராக வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. வல்வெட்டித்துறை மானாங்கானையில் உள்ள இவர் தனது பண்ணையில் 25 இற்கு மேற்பட்ட பசுக்களை வளர்த்துவருவதோடு, அவற்றிக்கான தீவனங்களை இயற்கை முறையில் தயாரித்தும் வருகிறார். இதற்காக தனது தோடடத்தில் புற்களைப் பெருமளவில் வளர்த்தும் வருகின்றார்.

# மகா சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை அருள்மிக ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகாசபை பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் சு.சேதுலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் விவாதிக்கப்படவுள்ளன.

ஏனவே அங்கத்தவர்களான மக்களை இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காலத்தில் செய்வதைத் தள்ளிப்போட வேண்டாம். தாமதத்தால் தீய முடிவுகள் ஏற்படும். - ஷேக்ஸ்பியர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## சுதந்திரத்தை நேசிப்பது என்றால்...

இன்று ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை மக்கள் சுதந்திரம் பெற்ற நாள். சுதந்திரமாக வாழ விரும்புதல் எப்போதும் மனிதர்களிடம் இருக்கக் கூடிய அவாதான். ஆனால் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான முறைகளும் மனித நாகரிக வளர்ச்சியோடு மாறிவர வேண்டியவை.

அடிமைப் புரட்சிக் காலத்துக் கோட்பாடுகளை இன்றும் சுதந்திரத்திற்கான கோஷங்களாக ஒப்புவித்துக் கொண்டிருக்க முடியாது. ஒன்றினது சுதந்திரம் மற்றையதன் சுதந்திரத்தை மறுதலிப்பதன் மூலமே அடையப்பட முடியும் என்று உணர்ந்திருந்தவை அன்றைய மனித உயிர்கள். நேருக்கு நேராக வாளால் வெட்டியோ துப்பாக்கியால் சுட்டுக்கொண்டோ, நீயா நானா உயிர் வாழ்வது என்று தீர்மானித்துக் கொண்ட காலம் அது.

நாம் விவேக மனிதர்களாக மேலும் மேலும் முன்னேறி வளர்ந்து வந்துவிட்டோம். இன்று, ஒருவர் இன்னொருவரை அடக்காமல், ஆனால் இருவரும் சேர்ந்து வாழ்வதற்குரிய வழிமுறையைக் கண்டுகொள்ளுதலே சுதந்திரத்திற்கான மனித ஏற்பாடாக இருக்க முடியும் என்று புரிந்துகொண்டிருக்கிறோம்.

எனது சுதந்திரம் இன்னொருவரைக் காயப்படுத்துவதாக இல்லாமல் நான் பெற்றுக்கொள்வதற்கு, பேச்சின் முறையும் வழியும் தெரிந்த நாகரிக மனிதர்களாகி இருக்கிறோம். வாழ்க்கையின் மீது கனவை ஏற்றி யதார்த்தத்திலிருந்து தப்பித்துக்கொள்ள ஆவேசத்தையும் முரசங்களையும் நம்பிய காலத்தையும் கடந்து வந்துவிட்டோம்.

இதந்தரு மனையினீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும் சுதந்திர தேவியைத் தொழுதிட மறக்கிலேனே என்கிற பாரதியின் உணர்வு எல்லோர்க்கும் இருப்பதுதான். ஆனால், சுதந்திரத்தையும் உரிமையையும் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளுக்கும், நாம் கடந்த காலத்தில் போய் நிற்க முடியாது.

இன்றைய சூழலுக்கு ஏற்பத்தான் நாம் முயற்சிகளைச் செய்ய முடியும். வெறுமனே பழைய கனவுகளிலிருந்துகொண்டு வாய்வீச்சுத் தலைவர்களின் முழக்கங்களில் இதமடைந்து கொண்டிருப்பது என்பது எங்களையே நாம் ஏமாற்றிக் கொள்வதுதான்.

நடைமுறைச் சாத்தியங்களை உணரவும் காட்டிக்கொள்ளவும் மறுக்கும் தலைவர்களின் இந்த வாய்வீச்சுக்கள், மக்களைத் துயரங்களில் அழுத்திக் கதிரை அரசியல் செய்ய எண்ணும் குரூரம் தான்.

மக்களின் அன்றாடத் துன்பங்கள் தெரியாத, தங்களது வாழ் நிலையிலிருந்து இவர்கள் பேசுகிறார்கள். மக்களை மேலும் மேலும் கஷ்டங்களில் தள்ளுவதை மறைப்பதற்காக போதை வசனங்களை அவர்களுக்குத் தருகிறார்கள்.

மக்களுக்குச் சுதந்திர வாழ்வு கிடைப்பதைப் பறித்து, "சுதந்திரத்திற்காக இன்னுமின்னும் கஷ்டப்படுங்கள்" என்பதற்கான ஆவேசப் பேச்சையே விதம் விதமாகத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

எவ்வளவுக்கெவ்வளவு மக்களின் துயர் கடுமையாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு கொள்கைப்பிடிப்பு வெறியேற்றிக் கொண்டிருக்கலாம் என்று கருதுகிறார்கள்.

இவர்களிடமிருந்து நாம் மீள வேண்டும். நமது இருப்பும் வாழ்வும் மகிழ்ச்சியும் மற்றவர்களின் இருப்பையும் மகிழ்வையும் ஏற்றுக்கொள்வதிலும், பகைவெறுப்பு மூட்டும் ஆவேசங்களின்றி அவர்களை ஏற்றுக்கொள்ள வைப்பதிலும்தான் இருக்கிறது என்பதை உணர வேண்டும்.

மற்றவர்களுடன் பன்மைத் தன்மையான ஒரு சூழலில் வாழ்வதற்கும் அதனால் இதம் பெறவுமான ஒரு மனோநிலையே நமது தேவை.

இனத்தாலோ மொழியாலோ மதத்தாலோ கலாசாரத்தாலோ இன்னுமின்னும் நாம் காண்பித்துக் கொள்ளும் வித்தியாசங்களாலோ நம்மிடமிருந்து வேறுபடுகிறவர்களிடமிருந்து நம்மை விலக்கிக் கொள்ளும் ஆவேசங்களுக்குப் பலியாகுவதை விடுத்து, மற்றவர்களுடனும் சேர்ந்து வாழ்தலை நாம் பழக வேண்டும்.

சுதந்திரத்தை நேசித்தல் என்பது இதுவாகத்தான் இருக்க முடியும்.

- ஆசிரியர்

# ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில்

# இலங்கைக்கு சாதகமான பதில்

அடுத்த மாதம் ஜெனிவா நகரில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 28 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு சாதகமான பதில் கிடைக்குமென சட்ட வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா.அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணை தொடர்பிலான அறிக்கை இந்தக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையிலேயே இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் காரணமாக இலங்கை சாதகமான பதிலொன்றை எதிர்பார்க்க முடியும் என சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் நல்லிணக்க திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தையும் கால அவகாசத்தையும் ஏற்படுத்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வாலிடம் நேற்று பிற்பகல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கால அவகாசம் குறித்து தீர்மானிப்பதற்கான உரிமை மனித உரிமைகள் பேரவையிடம் உள்ளபோதிலும் இலங்கைக்கு இதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என அமெரிக்கா நம்புவதாக இதன்போது நிஷா பிஸ்வால் கூறியுள்ளார்.

இலங்கையின் புதிய ஆட்சி தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உள்ளிட்ட அரசு மிகவும் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் புதிய அரசாங்கம் சவால்களை வெற்றி கொள்வதற்கு அமெரிக்க அரசாங்கம் ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவுள்ளதாக தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக

# அடிப்படை உரிமை மீறல்மனு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, தேர்தல்கள் ஆணையாளர் கோராத நிலையில் இராணுவத்தினரை அழைத்தமைக்கு எதிராகவே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னிலை சோஷலிஸ கட்சியினாலேயே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆயுதப் படைகளுக்கு பொலிஸாரின் அதிகாரங்களை வழங்கியே இராணுவம் அழைக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

அன்றிருந்த அரசாங்கம் 2011 ஆம் ஆண்டு, அவசரகாலசட்ட ஒழுங்குவிதிகளை நீக்கியது. அவ்வாறு இருந்த நிலையில், மக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின் 12ஆம் பிரிவைப் பயன்படுத்தி முழு நாட்டையும் கவனிக்கும் வகையில் பொலிஸ் அதிகாரம், இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படையினருக்கு கையளிப்பதற்கு ஒவ்வொரு மாதமும் கட்டளைச் சட்டத்தை தொடர்ச்சியாக அமுல்படுத்தியது.

எனினும், அவசரகாலச்சட்டத்தை நீக்கியதனூடாக ஜனநாயகத்தை ஏற்படுத்துவதாக காண்பித்து, உண்மையான இராணுவ அச்சுறுத்தல் விடுப்பதானது பிரஜைகளின் நிர்வாகத்துக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக கடந்த அரசாங்கத்தின் செயற்பாடு அமைந்திருந்தது.

இந்த மனுவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதான பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார். இராணுவத்துக்கு பொலிஸாரின் அதிகாரத்தை கொடுத்து முழு நாட்டு மக்களின் அடிப்படை உரிமையையும் அவர் மீறிவிட்டார் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கர்ப்பிணித் தாய்மாருக்கு

# மார்ச் முதல் கொடுப்பனவு

(கொழும்பு)

அரசின் வரவு - செலவுத்திட்டத்தில் கூறப்பட்டதன் படி கர்ப்பிணித்தாய்மார்களுக்கான 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மார்ச் மாதம் தொடக்கம் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் ரோஸி சேனநாயக்க தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் வருடாந்தம் நான்கு இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. எனவே முன்மொழியப்பட்ட 20 ஆயிரம் ரூபாவினை கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்க 800 மில்லியன் ரூபா தேவை.

எனவே இந்தப் பணத்தைப் பெறுவது குறித்து உலக வங்கியுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு இணக்கமான முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு சமூக ரீதியான புறக்கணிப்பு இன்றி அனைத்து கர்ப்பிணித் தாய்மாருக்கும் வழங்கப்படும். இந்தக் கொடுப்பனவு மாதாந்தம் 2000 ரூபா என்ற அடிப்படையில் கர்ப்பிணித்தாய்மாரின் நான்காம் மாதத்திலிருந்து வழங்கப்படுவதுடன், குழந்தை பிறந்த பின்னரும் ஐந்து மாதங்களுக்கு வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# மாளிகை வரியில் திருத்தம்:

# ஆராய்ந்து வருகிறது அரசு

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2015ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் மாளிகை வரியை திருத்துவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க சமர்ப்பித்த இந்த புதிய வரிக்கமைய 10 கோடி ரூபா பெறுமதிக்கு அதிகமான அல்லது 5000 சதுர அடி அளவுக்கு மேலதிகமாக உள்ள வீட்டு உரிமையாளர்கள் வருடாந்தம் 10 இலட்சம் ரூபாவை வரியாக செலுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள கட்டணங்கள், வரி ஆகியவற்றுக்கு மேலதிகமாகவே இந்த வரி அறவிடப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இதுகுறித்து பல எதிர்ப்புகள் கிளம்பியுள்ள நிலையில் 10 ஆயிரம் சதுர அடிக்கு மேலதிகமாக உள்ள வீட்டு உரிமையாளர்களிடம் மட்டும் இந்த வரியை அறவிடுவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

# ஜனாதிபதியின் கோரிக்கையை

# நிராகரித்தார் கிறிஸ்நோனிஸ்

(கொழும்பு)


பிரித்தானியாவிற்கான இலங்கையின் முன்னாள் உயர்ஸ்தானிகர் கிறிஸ்நோனிஸை மீண்டும் பதவியேற்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த கோரிக்கைக்கு கிறிஸ்நோனிஸ் ஜனாதிபதியை சந்தித்து விளக்கமளித்ததுடன் நிராகரித்ததாக ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அவரை சந்திக்கச் சென்ற கிறிஸ் நோனிஸ் உயர்ஸ்தானிகராக செயற்பட்ட இரண்டு வருடங்களில் தனது தலைமையில் உள்ள "மெக்வுட்ஸ்" நிறுவன பங்கு வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படாததால் அதற்கு முன்னுரிமை வழங்க வேண்டியுள்ளதென குறிப்பிட்டுள்ளார்.

அதனால் பூரணகால இராஜதந்திர சேவையில் ஈடுபடுவது இக்காலத்தில் கடினமானதென தான் அளித்த விளக்கத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆனால் பொதுநலவாய நாடுகள் விடயத்தில் ஜனாதிபதிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக கிறிஸ்நோனிஸ் தெரிவித்துள்ளார். மேலும் தனக்கு இருக்கும் சர்வதேச உறவுகள் ஊடாக எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**வரலாறு வேடிக்கையாகவும் இருக்கிறது. அன்று, ஷிராணியின் பதவியை பறித்த அரசாங்கத்தின் பிரதான கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவர் அதே கட்சியின் தலைவராகவும் ஜனாதிபதியாகவும் வந்து அவருக்கு மீண்டும் அந்தப் பதவியை வழங்குகிறார். அன்று அவரை பதவி நீக்கம் செய்ய பாவிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முக்கிய உறுப்பினரும் தமது மனைவியின் பதவி உயர்வு விடயத்தில் ஷிராணி வழங்கிய தீர்ப்பொன்றினால் அவரை பழிவாங்க காத்துக் கொண்டிருந்தவருமான ராஜித்த சேனாரத்ன இன்று அரசாங்கத்தின் பேச்சாளராக அவருக்கு மீண்டும் பதவி வழங்குவதை நியாயப்படுத்துகிறார்.**





# ஜனாதிபதி நினைத்தால் அது தான் சட்டம்

எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத் திட்டத்தில் நாட்கள் குறிப்பிடப்படாத 100 வாக்குறுதிகளில் ஒன்றாக ஷிராணி பண்டாரநாயக்க மீண்டும் கடந்த புதன்கிழமை பிரதம நீதியரசர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். ஆனால், நாம் அறியாத ஏதோ காரணத்தினால் மறுநாளே அவர் அப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

அரசாங்கத்தின் வேலைத் திட்டத்திற்கான 100 நாட்களில் 25 நாட்கள் ஏற்கெனவே சென்றுவிட்டன. அதற்கிடையே அவ் வேலைத் திட்டத்தில் நாட்கள் குறிப்பிடப்படாமல் முன்வைக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அவற்றுள் எரிபொருட்களின் விலைகளை குறைத்தல், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் தொழில்சார் உரி மைகளை மீண்டும் வழங்கியமை, ஷிராணி பண்டாரநாயக்கவை மீண்டும் அவரது பவிக்கு நியமித்தல், ஆகியனவும் அடங்கும்.

நாட்களைக் குறிப்பிட்டு முன்வைக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளில் இன்று வரை மூன்று முக்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ள போதிலும் அவற்றில் குட்டி வரவு-செலவு திட்டம் பற்றிய வாக்குறுதி மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சிகள் முன்வைத்த பிரதான வாக்குறுதியான நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்காக ஜனவரி 19 ஆம் திகதி சட்ட வரைபொன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அது நிகழவில்லை.

அதேபோல் தற்போதைய தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கான சர்வ கட்சி குழுவொன்று ஜனவரி மாதம் 28 ஆம் திகதி நியமிக்கப்பட வேண்டும் அதுவும் நிகழவில்லை.

**இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க் கட்சிகள் முன்வைத்த பிரதான வாக்குறுதியான நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்காக ஜனவரி 19 ஆம் திகதி சட்ட வரைபொன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அது நிகழவில்லை. அதேபோல் தற்போதைய தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கான சர்வ கட்சி குழுவொன்று ஜனவரி மாதம் 28 ஆம் திகதி நியமிக்கப்பட வேண்டும் அதுவும் நிகழவில்லை.**

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வது தொடர்பான புதிய ஜனநாயக முன்னணி அரசாங்கத்தின் வாக்குறுதி அவ்வாறே நிறைவேற்றப்படப் போவதில்லை என்பது இப்போது தெரிய வந்துள்ளது. இப்போது அரசாங்கம் அம் முறையை இரத்துச் செய்யாது நிறைவேற்று ஜனாதிபதியின் சில அதிகாரங்களை மட்டும் குறைப்பதாக கூறுகிறது.

குறைக்கப்படப் போகும் அதிகாரங்களின் அளவை பொறுத்தே அது நியாயமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கலாம். அவ்வாறு அதிகாரங்கள் குறைக்கப்பட்டதன் பின்னரும் தொடர்ந்தும் நாடாளுமன்றத்தை புறக்கணித்து செயற்படக்கூடிய ஜனாதிபதி ஒருவர் இருந்தால் அது நிச்சயமாகவே அரசாங்கம் மக்களுக்கு அளித்த பிரதான வாக்குறுதியை மீறியதாகும்.

இந்த நாட்டில் பெரும்பாலான மக்கள், போரை முடிவுக்கு கொண்டு வந்ததை விரும்புகிறார்கள். பலர் கூறுவதைப் போல் போரை முடிவுக்கு கொண்டு வந்ததன் பெருமை மகிந்த ராஜபக்ஷவுக்குரியதல்ல. போர் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் போரை நிறுத்துமாறு மேற்குலகில் இருந்து வந்த மாபெரும் நெருக்குதலை அசையாது எதிர்கொண்ட பெருமை மட்டும் தான் மகிந்த ராஜபக்ஷவுக்குரியதாகும். அந்த நெருக்குதல் சாதாரண நெருக்குதலல்ல. ஆனால், போர் வெற்றி உறுதிப்படுத்தப்படுவதற்கு வேறு பல காரணிகளும் ஏதுவாகின.

மகிந்த பதவிக்கு வரு முன்னரே யாழ். குடாநாட்டைப் படையினர் கைப்பற்றிக் கொண்டமை, ரணில் விக்ரமசிங்கவின் சமாதானத் திட்டத்தினால் புலிகள் அமைப்பு பிளவுபட்டமை, அத் திட்டத்தின் காரணமாக புலிகளின் நம்பகத்தன்மை சர்வதேச ரீதியில் கேள்விக்குறியாகியமை, அதன் காரணமாக சுமார் 30 நாடுகள் புலிகளைத் தடைசெய்தமை, அதன் காரணமாக புலிகளுக்கு நிதி திரட்டவும் ஆயுதங்களை கொண்டு வரவும் தடைகள் ஏற்பட்டமை, பல நாடுகள் புலிகளுக்கு எதிராக புலனாய்வு தகவல்களை வழங்க முன்வந்தமை,

சமாதானத் திட்டம் அமுலில் இருந்த காலத்தில் பல புலி உறுப்பினர்கள் திருமணம் செய்து கொண்டதால் போருக்கான அவர்களது தியாக உணர்வு குறைந்தமை, முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்லையின் காலத்தில் உருவாக்கப்பட்ட ஆழ ஊடுருவி தாக்கும் படையணி மற்றும் புலிகள், தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களையும் இந்தியாவையும் பகைத்துக் கொண்டமை மற்றும் பொன்சேகா, கோத் தாபய ஆகிய காரணிகள் அவற்றுள் அடங்கும். பொன்சேகா மற்றும் கோட்டாபய ஆகிய காரணிகள் அரசாங்கத்தின் போர் வெற்றிக்கு ஆற்றிய பங்கு மிகப் பெரியதாகும். வேறு பல காரணிகள் இல்லாதிருந்தாலும் இந்த இரண்டு காரணிகளால் அவற்றை சமாளித்துக் கொண்டு அரசாங்கம் போரை வெற்றி கொண்டிருக்க முடியும்.

படைப் பலத்தை மும்மடங்காக்கியமை, உளவுத் துறையை வளர்த்தெடுத்தமை, படையினருக்கான சேம நலத் திட்டங்களை உருவாக்கியமை மற்றும் எட்டுப் பேர் கொண்ட விசேட படைய ணிகள் போன்ற புதிய போர் உத்திகளைக் கண்டுபிடித்தமை சரத் பொன்சேகாவின் பரிகாரங்களில் சிலவாகும்.

ஆயினும் பாதுகாப்புச் செயலாளராக கோத்தாபய ராஜபக்ஷநியமிக்கப்படாவிட்டிருந்தால் பொன்சேகாவுக்கு இந்த தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாது போயிருக்கவும் கூடும். கோத்தாபய ஒரு படை வீரர் என்பதாலும் ஜனாதிபதியின் சகோதரர் என்பதனாலும் பொன்சேகாவுக்கு அவர் மூலம் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடிந்தது.

ஆனால், போர் வெற்றியை அடுத்து பொன்சேகா மேலும் படைகளை பலப்படுத்த எடுத்த முயற்சி, ராஜபக்ஷ குடும்பத்தை சந்தேகங்கொள்ளச் செய்தது. அதனால் அவர் பதவி உயர்வு என்ற போர்வையில் இராணுவத் தளபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அப்போது தான் மோதல் உருவாகியது. பொன்சேகாவின் பதவி, பதக்கங்கள், ஓய்வூதியம் பறிக்கப்பட்டு அவரது பெயரும் இராணுவ வரலாற்றிலிருந்து நீக்கப்பட்டது.

ஷிராணி பண்டாரநாயக்கவின் கதை அதை விட வித்தியாசமானதாகும். அவரும் இதற்கு முன்னர் இருந்த பல பிரதம நீதியரசர்களைப் போலவே சாதாரரண பிரதம நீதியரசர் தான். இந் நாட்டு ஜனநாயகத்திற்கு பேரடியாக அமைந்த 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஷிராணியின் காலத்திலேயே உயர் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

கடந்த அரசாங்கம் அவர் மூலம் அந்த திருத்தத்துக்கு சட்ட அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு அவரை பதவியிலிருந்து நீக்கியது. இந்த அரசாங்கம் அவரது பதவியை மீண்டும் அவருக்கு வழங்கி அந்த திருத்தத்தையும் இரத்துச் செய்யப் போகிறது.

இரண்டு அரசாங்கங்களும் ஷிராணி பண்டாரநாயக்க சம்பந்தமாக நடவடிக்கை எடுத்த முறை பல கேள்விகளை எழுப்புகின்றன.

தனிப்பட்ட பிரச்சினையாகவே ராஜபக்ஷ குடும்பத்துக்கும் ஷிராணிக்கும் இடையே பிரச்சினை உருவாகியது. அந்தப் பனிப்போர் 2012 ஆம் ஆண்டு இறுதியில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அறிமுகப்படுத்திய திவிநெகும சட்டமூலத்தின் காரணமாக வெளிப்படையான போராக மாறியது.

அந்த சட்ட மூலத்துக்கு சகல மாகாண சபைகளினதும் அங்கீகாரத்தை பெற வேண்டும் என பிரதம நீதியரசர் ஷிராணி தீர்ப்பு வழங்கினார். அப்போது வட மாகாண சபைதெரிவு செய்யப்படாதிருந்ததினால் இது தமது சட்ட மூலத்தை முடங்கச் செய்ய வழங்கிய தீர்ப்பாகவே அரசாங்கம் கருதியது. அதுவும் சரியாக இருக்கலாம். ஏனெனில் ஷிராணி 18 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தையும் அங்கீகரித்தவர்.

ஷிராணியின் அந்தத் தீர்ப்புக்கு பலமான ஆதாரங்கள் இருக்கவும் இல்லை. அதேபோல் திவிநெகும சட்டத்துக்காக அரசாங்கம் பிரதம நீதியரசருடன் மோதுமளவுக்கு அதில் எந்த முக்கியத்துவமும் இருக்கவில்லை. இது கௌரவப் பிரச்சினையே. இறுதியில் ஷிராணியின் பதவி பறிக்கப்பட்டது.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றின் மூலமே விசாரிக்கப்பட்டன. அத் தெரிவுக் குழுவின் பெரும்பான்மையினர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு உறுப்பினர்களாக இருந்தனர்.

இங்கே ராஜப்க்ஷ குடும்பத்தின் நோக்கமும் உத்திகளும் நாகரிகமற்றதாக இருந்த போதிலும் அந்நடவடிக்கை சட்ட விரோதமாகவில்லை. அதாவது, அவர் தெரிவுக்குழுவால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளார். தெரிவுக்குழு சட்டபூர்வமானதாகும். அவ்வாறிருக்க சட்ட பூர்வமாக குற்றவாளியாக காணப்பட்ட ஒருவரை நீதியரசராக மீண்டும் பதவியில் எவ்வாறு அமர்த்த முடியும் என்ற கேள்வி எழுகிறது.

சிராணியும் மொஹான் பீரிஸும் ஒரே விதமாகவே பதவி நீக்கம் செய்யப்பட்டனர். இரண்டு சந்தர்ப்பங்களிலும் நிறைவேற்று ஜனாதிபதி முறையே நிர்ணயகரமான காரணியாக இயங்கியது. இருவரும் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தினாலேயே நீக்கப்பட்டனர்.

வரலாறு வேடிக்கையாகவும் இருக்கிறது. அன்று, ஷிராணியின் பதவியை பறித்த அரசாங்கத்தின் பிரதான கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவர் அதே கட்சியின் தலைவராகவும் ஜனாதிபதியாகவும் வந்து அவருக்கு மீண்டும் அந்தப் பதவியை வழங்குகிறார். அன்று அவரை பதவி நீக்கம் செய்ய பாவிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முக்கிய உறுப்பினரும் தமது மனைவியின் பதவி உயர்வு விடயத்தில் ஷிராணி வழங்கிய தீர்ப்பொன்றினால் அவரைப் பழிவாங்க காத்துக் கொண்டிருந்தவருமான ராஜித்த சேனாரத்ன இன்று அரசாங்கத்தின் பேச்சாளராக அவருக்கு மீண்டும் பதவி வழங்குவதை நியாயப்படுத்துகிறார்.

சட்டம் என்பது சட்டபூர்வமாக்கப் பட்ட ஆளும் வர்க்கத்தின் விருப்பமே என கார்ல் மார்க்ஸ் ஒரு முறை கூறினார். ஆளும் வர்க்கத்தின் என்பதற்குப்பதிலாக ஆளும் குழுவின் அல்லது ஆட்சியாளரின் என்று குறிப்பிட்டால் அந்தக் கூற்று இன்றைய நிலைமைக்கும் பொருத்தமாக இருக்கிறது.

# வியாபார நோக்கில் அபகரிக்கப்பட்ட தமிழரது காணிகள் மீளகையளிக்கப்படும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கில் உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச தமிழ் மக்களிடம் இருந்து அபகரித்த காணிகள் மீண்டும் அவர்களிடமே வழங்கப்படும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



வடக்கில் தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு சில இடங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவை தொடர்ந்தும் அவ்வாறே கணிக்கப்படும்.

ஆனால், கடந்த ஆட்சியில் பாதுகாப்பு செயலராக இருந்த கோத்தாபய ராஜபக்ச தன்னிச்சையாக தனது சொந்த வியாபார நோக்கத்திற்காகவும் தமிழ் மக்களின் காணிகளைக் கைப்பற்றியுள்ளார். அவ்வாறு கைப்பற்றபபட்டுள்ள காணிகளை மீண்டும் தமிழ் மக்களுக்கே வழங்குவோம.

தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி, இந்தப் பிரச்சினை சிங்கள மக்களுக்கும் உள்ளது.

பாணமையில் உயர் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப் பட்டதால், அங்கு வாழ்ந்த 4000இறகும் மேற்பட்ட சிங்கள விவசாயிகள் வெளியேற்றப்பட்டனர்.

அவ்வாறு கைப்பற்றப்பட்ட காணிகளில், சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதிகளை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. வடக்கு மாகாணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களில் படையினர் கோல்ப் விளையாட்டுத்திடல் அமைப்பது தவறானது இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேசிய பாதுகாப்பை முதன்மைப்படுத்தி மக்களின் காணிகளை உயர் பாதுகாப்பு வலயங்களுக்காக கைப்பற்றுவது வேறு விடயம். ஆனால் தனிப்பட்டவர்களின் வர்த்தகத்திற்காக உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறிக் கொண்டு காணிகளை கைப்பற்றுவது தவறானது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ராஜபக்ஷ என்ற புற்று நோயை ஒழித்துக்கட்டி அதனை தூய்மைப்படுத்த வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பதவி வகித்த போதிலும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைகளில் அவர் ஈடுபடமாட்டார் என நம்புகிறேன்.

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி பதவியில் அமர்த்த ஐ.தே.கட்சி மாபெரும் அர்ப்பணிப்பை செய்ததை மறந்து விடக் கூடாது.

அதேவேளை, நூறு நாள் வேலைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கு மூன்றில் இரண்டு பலம் தேவை.

அத்துடன் பண்டாரநாயக்க சிந்தனையை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் முன்னெடுத்து ராஜபக்சவை ஒழித்துக் கட்ட வேண்டும். இவ்வாறு பாரிய கடப்பாடுகளை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டியுள்ளது.

அவர் கிராமத்தில் பிறந்தவர். எனவே பிரச்சினைகளை திறமையாக தீர்த்து வைப்பார் என்பது நிச்சயம்.

எனவே, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரச்சினைகள தலைதூக்காது என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

# யாழ் வரார் நிசா



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தென் மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான அமெரிக்க துணை ராஜாங்கச் செயலாளர் நிசா பிஸ்வால் யாழ்ப்பாண குடாநாட்டுக்கு விஜயம் செய்யமாட்டர் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

அவரது விஜயம் குறுகியது என்பதனால் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய நேரம் கிடையாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

பிஸ்வாலின் இலங்கை விஜயத்தின் போது யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

# பிரதமர் வேட்பாளராக மகிந்த களமிறக்க கட்சிகள் தயார்



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகள் கூட்டாக இணைந்து, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபுக்ஸவை பிரதமராக்கும் புதிய அரசியல் கூட்டணியொன்றை எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பிக்கவுள்ளன.

தினேஸ் குணவர்தன தலைமையிலான மஹஜன எக்சத் பெரமுன, மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான பிவித்துரு ஹெல உறுமய, விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி மற்றும் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகள் இவ்வாறு புதிய கூட்டணி ஒன்றை உருவாக்க உள்ளன.

இந்தக் கட்சிகள் ஏற்கனவே மக்களை தெளிவுபடுத்தும் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மஹிந்தவின் வருகைக்கு நீங்கள் தயாரா என்ற தொனிப்பொருளில் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இந்தக் கருத்தரங்குகளை முன்னாள் அமைச்சர் தினேஸ் குணவர்தன வழி நடாத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. கடுமையான சிங்களப் பேரினவாத கொள்கைகளைப் பின்பற்றி வரும் மூன்று அரசியல் கட்சிகளுடன் இடதுசாரியாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் வாசுதேவ நாணயக்காரவும் இணைந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தை கைப்பற்றுவோம்

## மகிந்த அமரவீர எச்சரிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்தை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கவிழ்ப்பதற்கான இயலுமை உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ரன்ன பகுதியில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் அரசை நாம் கைப்பற்ற முடியும். இன்று கூட எமக்கு தேவை ஏற்பட்டால் நாடாளுமன்றத்தில் கையொப்பமிடப்பட்ட பிரேரணையொன்றை முன்வைத்து எமது பிரதமர் ஒருவரை நியமிக்க முடியும். எமது அமைச்சரவையை நியமிக்க முடியும்.

புதிய ஜனாதிபதிக்கு கௌரவம் செலுத்தும் வகையிலேயே இந்த நூறுநாள் நிருவாகத்தை முன்னெடுக்க இடமளித்துள்ளோம். ஆனால் இந்த அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் ஒத்துழைப்போம் என்பது இதன் மூலம் புலப்படாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களை நோக்குமிடத்து பொலிஸாருக்கு பொறுப்பாக உள்ள அமைச்சர் கடமையை நிறைவேற்றத் தவறியமை தெரியவந்துள்ளது.

இன்னும் சில நாட்களில் பொலிஸார் உரிய முறையில் கடமையை நிறைவேற்றவில்லை என்பது உறுதியானால் பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சரை தொடர்ந்தும் அந்தப் பதவியில் வைத்திருப்பதா இல்லையா என்பதை நாம் தீர்மானிக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியலமைப்பு சபை மூலமே பிரதம நீதியரசர் நியமனம்



(கொழும்பு)

பிரதம நீதியரசர் இனிமேல் அரசியலமைப்பு சபையின் ஊடாகவே நியமிக்கப்படுவார். அவரை ஜனாதிபதி நியமிக்க மாட்டாரென சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியும் ஓர் அரசியல்வாதியே. இதனாலேயே பிரதம நீதியரசரை அரசியலமைப்பு சபையினூடாக நியமிப்பதற்கான அரசியல் மறுசீரமைப்பொன்றைச் செய்யவிருப்பதாகவும் அவர் நாடாளுமன்றத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மனித உரிமை மீறல் குறித்த விசாரணை அறிக்கை தயார்

## ஜனாதிப்தி ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

குறித்த அறிக்கை எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிடம் கையளிக்கப்படும் என காணாமற போனோர தொடர்பான முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம தெரிவித்தார். அதற்கு திகதி ஒன்றை வழங்குமாறு ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் கோரிக்கை முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஆணைக்குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடவுள்ளதாக அவர் கூறினார்.

யுத்த காலத்தில் காணாமற் போனவர்களின் உறவினர்கள் வழங்கிய முறைப்பாடு மற்றும் வாக்குமூலத்தின் அடிப்படையில் குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

# தனியார் பேருந்துகள் குறித்து இருநாட்களில் 110 முறைப்பாடுகள்

தனியார் பேருந்துகள் குறித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கடந்த இரு தினங்களில் 110 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதில் 70இற்கும் அதிகமான முறைப்பாடுகள் நேற்று முன்தினம் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பேருந்து கட்டண மாற்றத்தை செயற்படுத்தாமை குறித்தே இந்த முறைப்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. எரிபொருள் விலை குறைப்பை அடுத்து பேருந்து கட்டணம் 10 வீதம் குறைக்கப்பட்டுள்ள போதிலும் பல இடங்களில் அது செயற்படுத்தப்படவில்லை என பயணிகளால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளை அடிப்படையாக வைத்து நாடு முழுவதும் விசேட வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைகுழு அறிவித்துள்ளது.

# வழக்குத்தாக்கல்


(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலகட்டத்தில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய ரூபாவாஹினி தொலைக் காட்சியில் மேற்கொண்ட விளம்பரக் கட்டண நிலுவை தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் சோமரத்ன திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.




இதன்படி, 50 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை முன்னாள் ஜனாதிபதி ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குரங்குகளால் ஏற்படும் அழிவுகளிலிருந்து
# பழவகைகளை காப்பதற்கான கலந்துரையாடல்



(தென்மராட்சி)

குரங்குகளினால் ஏற்படுத்தப்படும் அழிவுகளிலிருந்து பழவகைகளைக் காப்பாற்றும். "உயிரியல வகைமையைபாதுகாத்தல்" எனும் திட்டத்தின் நடவடிக்கைக்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மீசாலை பழமுதிர்ச்சோலை கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இதில் வனவிலங்கு திணைக்கள உயர்அதிகாரிகள், விவசாய திணைக்கள உயர்அதிகாரிகள் மற்றும் தென்மராட்சி பிரதேச பழச்செய்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது வனவிலங்கு திணைக்கள அதிகாரி தெரிவிக்கையில்,

3 நாட்கள் தென்மராட்சிப் பிரதேச கைதடி முதல் எழுது மட்டுவாழ் வரை அவதானித்ததில் 30, 35 குரங்குகளும் மீசாலை சோலை அம்மன் பகுதியில் 100, 150 குரங்குகளும் கூட்டமாக திரிவதாகத் தெரிவித்தார்.

பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களுடன் இணைந்து பிரதேச இளைஞர்களுக்கும் பயிற்சி கொடுத்து, கூடுகளுக்கு குரங்குகளை வரவைத்து அவற்றுக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில் அவற்றை இடம்மாற்ற வேண்டும் எனவும் கூண்டுக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களை சேர்ந்தவை அடைக்கப்படும் போது அவை தமக்குள் முரண்படக்கூடும். எனவும கூட்டம்கூட்டமாகவே வனத்தில் கொண்டு சென்று விடுதல் வேண்டும். அதற்கான அவதானிப்புகளையே முதலில் மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதற்கு பழச்செய்கையாளர்கள், தாம் பரீட்சித்துப் பார்த்து நடவடிக்கை மேற்கொண்டு காலம கடத்தமுடியாது எனத்தெரிவித்தனர். அதற்குப் பதிலளித்த விவசாயத் திணைக்கள அதிகாரி விவசாயிகளது பழ உற்பத்தியை பாதுகாக்கும் அதேவேளை வனவிலங்கு பாதுகாப்புச்சட்டத்தினை அனுசரித்தே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குரங்குகளுக்கு பாதிப்போ துன்பமோ ஏற்படாதவகையிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்

இது விடயத்தில் பொதுமக்களும் ஊடகங்களும் மிக அவதானமாக கருத்துக்களை முன்னெடுக்க வேண்டும். எல்லோரது நோக்கமும் சட்டரீதியான முறையில் வன விலங்குபாதுகாப்புச்சட்டத்திற்கு உட்பட்ட முறையில் நடப்பதுடன் பழச்செய்கையாளர்களையும் பாதுகாப்பதுமாகும் என்றார். • (11)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மத்தியைச் சேர்ந்த சரவணமுத்து திரவியச்செல்வம் யாழ்ப்பாண நீதி நிருவாக வலயத்துக்கான சமாதான நீதவானாக யாழ்.மாவட்ட நீதவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் கடந்த 19 ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஓய்வு பெற்ற அரச ஊழியர் ஆகவும், முன்னாள் மகாதேவா ஆச்சிரம செயலாளராகவும், முன்னாள் யோகர் சுவாமி திருவடி நிலைய முதியோர் இல்ல நிர்வாக உத்தியோகத்தராகவும் கிளி.மாவட்ட சிவதொண்டர் அணித் தலைவராகவும் இருந்து பல்வேறு சமய, சமூகப் பணிகளை ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




**தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகமும் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கமும் இணைந்து மிருசுவில் ஆதார வைத்தியசாலையில் நடாத்திய இலவச மருத்துவ முகாமின் போது... (02)**


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு
05.02.2015

நாளைய தினமுரசு வாரமலரில்...

வரவேற்பைப் பெறும் மினி வரவு - செலவுத் திட்டம்

மலேசியாவில் தலையெடுக்கும் இனமுறுகல்!

ஐரோப்பாவில் எதிரொலிக்கும் இலங்கை அரசியல் மாற்றம்

கேள்விக்குறியாகும் உயர்கல்வி கலாசாரம்



தகுதியான முதல்வன்

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!




சூடு - சுவை - சுவாரசியம் - இதுதான் தினமுரசு

# இரண்டாவது போட்டியிலும் வென்று தொடரைக் கைப்பற்றியது நியூஸிலாந்து

(நேப்பியர்)

வில்லியம்ஸன், ரெய்லர் ஆகியோரின் இணைப்பாட்ட சதத்தின் மூலம் பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் 119 ஓட்டங்களால் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி தொடரை கைப்பற்றிக் கொண்டது



நேப்பியரில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அவ்வணி சார்பாக குப்ரில், மக்கலம் ஆகியோர் ஆரம்ப இணைப்பாட்டத்தில் சிறந்த அடித்தளத்தை இட்டனர். எனினும் அணி 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை இவ்விணைப்பு பிரிக்கப்பட்டது. பின்னர் வந்த வில்லியம்ஸன் பாகிஸ்தான் பந்துவீச்சை துவம்சம் செய்தார். இவருடன் குப்ரிலும் இணைந்து ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்த வேளை 27.2 ஓவரில் குப்ரில் (76) ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த ரெய்லர் வில்லியம்ஸனுடன் இணைந்து அதிரடியில் கலக்கினார். இந்த நிலையில் வில்லியம்ஸன் (88) பந்துகளில் ஒரு சிக்ஸர், 14 பவுண்டரிகள் அடங்கலாக 112 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்தார்.

நிறைவில் நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 369 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ரெய்லர் ஆட்டமிழக்காமல் 70 பந்துகளில் 2 சிக்ஸர் 13 பவுண்டரிகளுடன் 102, எலைட் (28), மக்கலம் (31) ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மொஹமட் இர்பான் (2) அப்ரிடி , அடில், அஹமட் ஷேசாட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

370 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு சிறந்த அடித்தளத்தை முன்வரிசை வீரர்கள் இட்டபோதிலும் பின்வரிசை வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டத்தால் அவ் அணி 43.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 250 ஓட்டங் களை மாத்திரமே பெற்று தோல்வியைத தழுவியது.

அவ்வணி சார்பாக மொஹமட ஹபீஸ் (86), அஹமட் ஷேசாட் (55), மிஸ்பாஉல் ஹக் (46) ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சௌத்தி, மிலினி, மக்கலம், எலைட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக வில்லியம் சன் தெரிவானார்.

# உலகக் கிண்ணத்தை கைப்பற்றும் பாகிஸ்தான்



நடைபெறவுள்ள உலகக்கிண் போட்டியில் வென்று கிண்ணத்தை பாகிஸ்தான் அணி கைப்பற்றுமென அந்த அணியின முன்னாள் தலைவர் இன்ஸமாம் உல்ஹக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா-பாகிஸ் தான் போட்டி எப்பொழுதும் முக்கியமானது. பாகிஸ்தான் அணி உலக கோப்பையை வெல்லும். இந்திய அணிக்கு எதிரான தொடக்க ஆட்டத்தில் பாகிஸ்தான் தோற்கும் என்று நான் நினைக்க வில்லை. இந்திய அணியின் கப்டன் டோனி நெருக்கடியான நேரத்தில் சிறப்பாக செயற்படக் கூடியவர் என்றார்.

# உலகக்கிண்ண அணியில் இடமில்லை யுவராஜ், கம்பீர் அதிருப்தி

உலகக்கிண்ண அணியில் இடம்பெறாமல் போனது பெரும் ஏமாற்றளிப்பதாக யுவராஜ் சிங்; கம்பீர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

நியூஸ்24 கிரிக்கெட் கான்க்ளேவ்வில் கலந்து கொண்ட போது இவர்கள் இருவரும் ஏமாற்றம் தெரிவித்தனர்.

2011 உலகக்கோப்பையில் விளையாடிய சேவாக், கம்பீர், யுவராஜ், ஹர்பஜன், முனாப் பட்டேல், நெஹ்ரா ஆகியோரை அணித்தேர்வுக் குழு புறக்கணித்து இளம் வீரர்களுக்கு வாய்ப்பளித்தது.

"உலகக்கிண்ண அணியில் தேர்வு செய்யப்படாதது ஏமாற்றமளிக்கிறது. இந்த முடிவு நம் கையில் இல்லை. இப்போதைக்கு நான் ரஞ்சி கோப்பை கிரிக்கெட்டில் முழு கவனம் செலுத்தி வருகிறேன். இதில் சிறப்பாக விளையாடி அணிக்குள் மீண்டும் வர முயற்சி மேற்கொண்டு வருகிறேன். என்றார் யுவராஜ் சிங்.

கம்பீர் கூறும்போது, நான் ரன்களை எடுத்து போட்டிகளில் வெற்றி பெறுவதற்காக கிரிக்கெட் ஆடுகிறேன்.

இந்திய அணி, டெல்லி, ஐபிஎல் அணி என்று எதில் விளையாடினாலும் ரன்கள் அடிக்க வேண்டும், வெற்றி பெற வேண்டும் என்பதில எனக்கு நிறைய ஆர்வம் உண்டு.

இந்திய அணியில் இடம் பெறாதது குறித்து எனக்கு ஏமாற்றமாகவே இருக்கிறது நாம் கடந்த உலகக்கோப்பை சாம்பியன் என்று நினைக்கும் போது பெருமையாக இருக்கிறது இந்த உலகக்கோப்பை அணியிலும் விளையாட நிச்சயமான விருப்பம் என்னிடத்தில் இருந்தது. என்றார்

# உலகக் கிண்ணத்திற்கு கனவு காண வேண்டாம்

## இங்கிலாந்தை கேலிசெய்யும் ஜோன்சன்



உலககிண்ண கோப்பைக்கு கனவுகாண வேண்டாமென இங்கிலாந்து அணியை கேலி செய்துள்ளார் அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர் ஜோன்சன்

இதுகுறித்து அவர் கூறியதாவது உலக கோப்பையில் ஒவ்வொரு அணிக்கும் நெருக்கடி இருக்கும். உலக கோப்பையை வெல்வது இங்கிலாந் தின் கனவாக இருக்கும். ஆனால் அந்தக் கனவை அவர்கள் நிறுத்தி விட வேண்டும். அவர்களுக்கு எந்தவித நெருக்கடியும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

நொக்அவுட்களில் ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றி பெறுவது கட்டாயமாகும்.

சொந்த மண்ணில் விளையாடுவதால் வெற்றி நெருக்கடி இருக்கும்.

ஆனால் நாங்கள் உலக கோப்பைக்காக சிறப்பான நிலையில் உள்ளோம்.

என்னைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஆட்டத்திலும் சிறப்பாக பந்துவீசி விக்கெட்டுகளை கைப்பற்றுவது தான் இலக்காக உள்ளது எனக் கூறியுள்ளார்.

# போல்க்னர் சந்தேகம்

அவுஸ்ரேலிய அணியின் இளம் சகலதுறை வீரர் ஜேம்ஸ் போல்க்னர், இங்கிலாந்துடனான இறுதிப் போட்டியில் உடல் உபாதைக்கு உள்ளாகிய நிலையில் உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது.

24 பந்துகளில் அரைச் சதத்தைப் பெற்றது மட்டுமல்லாமல், அன்றைய போட்டியில் தான் வீசிய முதலாவது பந்துவீச்சிலேயே ஜோ ரூட்டின் விக்கெட்டையும் வீழ்த்தி அசத்தியிருந்தார்

ஆயினும், தனது மூன்றாவது ஓவரை அவர் வீசிக்கொண்டிருந்த போது உடல் உபாதைக்கு உள்ளாகி மைதானத்தைவிட்டு வெளியேறியிருந்தார்.

தற்போது வெளியாகியிருக்கும் தகவல்களின்படி, அவரது காயமானது சற்று மோசமானதாகவே இருப்பதாகத் தெரியவருகிறது.

சகவீரர் மக்ஸ்வெல் கருத்துத் தெரிவிக்கையில், போல்க்னர் அணிக்கு முக்கியமான ஒருவர். போட்டியை முடித்து வைப்பதில் சிறந்தவர்.

அவரது இழப்பு எமக்கு உலகக் கிண்ணத் தொடரில் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# இந்திய பந்துவீச்சாளர்களுக்கு போதிய பயிற்சிகள் இல்லை



அவுஸ்ரேலிய சுற்றுப்பணத்தின் போது இந்திய அணியின் மோசமான செயற்பாடுகளுக்கு இந்திய பந்துவீச்சாளர்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்படாமையே காரணமென ஹர்பஜன் சிங்குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் அளித்த போட்டியில் மேலும் கூறியுள்ளதாவது,

.அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்தில் இந்திய அணியின் மோசமான செயற்பாடுகளுக்கு பந்து வீச்சாளர்கள் தான் காரணம். பந்துவீச்சாளர்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்படவில்லை. இதனால் தான் இந்திய வீரர்களால் நேர்த்தியுடன் பந்துவீச முடியவில்லை.

எந்த ஒரு இந்திய பந்துவீச்சாளரும் அவுஸ்ரேலியாவில் 6 பந்தையும் சரியான இலக்கில் வீசியது கிடையாது. இதற்கு முறையான பயிற்சியின்மை தான் காரணம்.

முகமதுஷமி, உமேஷ் யாதவ் ஆகியோர் திறமையான வேகப் பந்து வீரர்கள்தான். ஆனால் அவர்களால் நேர்த்தி யுடன் பந்துவீச முடியவில்லை. பயிற்சியில் முழுமையாக செய்ய முடியாவிட்டாலும் கொஞ்சம் மாற்றிவிடலாம்.

நான் பந்து வீசிய துடுப்பாட்ட வீரர்களில் பாகிஸ்தான் வீரர்கள் இன்சமாம், சயீத் அன்வரை அவுட் செய்ய முடியாமல் திணறினேன். எனக்கு இந்தி சினிமாவில் நடிக்க வாய்ப்பு எதுவும் வரவில்லை.அப்படி வெளியான தகவல தவறானது.

நான் இந்திய அணியில் விளையாடாவிட்டா லும் இந்திய அணி உலகக் கோப்பையை வெல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். எனத் தெரிவித்தார்.

# அரையிறுதிக்கு இந்திய அணி உலக கிண்ணத்தில் முன்னேறும்

## சேவாக் நம்பிக்கை

உலகக்கிண்ணப் போட்டிகளில் இந்திய அணி நிச்சயம் அரையிறுதிக்கு முன்னேறும் என அதிரடி வீரர் விரேந்திர சேவாக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

92.7 பிக் எ/ப்.எம்-இன் புதிய நிகழ்ச்சி அறிமுக விழாவில் கலந்து கொண்ட சேவாக் இதனைத் தெரிவித்தார்.

"நிச்சயம் இந்திய அணி அரையிறுதிக்குத் தகுதி பெறும் என்று நான் நம்புகிறேன். அதன் பிறகு அந்தக் குறிப்பிட்ட நாளில் எப்படி ஆடுகிறோம் என்பதைப் பொறுத்து இந்திய அணியின் கோப்பை வெல்லும் வாய்ப்புகள் உள்ளன.

2003 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கோப்பை போட்டிகளுக்கு முன்பு மிக மோசமான நியூஸிலாந்து தொடர் நம் அணிக்கு அமைந்தது. அனைவரும் உலகக்கோப்பையில் இந்திய அணி அவ்வளவுதான் என்றனர்.



ஆனால் நடந்தது என்ன? நாம் இறுதிப்போட்டிக்குள் சென்றோம்.

எப்போதும் முதல் போட்டியை வென்று விட்டால் பெரிய அழுத்தத்திலிருந்து விடுபடலாம். முதல் ஒன்று அல்லது 2 போட்டிகளில் பெரிய அணிகளை வீழ்த்திவிட்டால் மற்றைய அணிகளை எதிர்கொள்வதில் சிக்கல் இருக்காது. முதல் போட்டியில் இந்தியா, பாகிஸ்தானை வீழ்த்தி விட்டால் அது ஒரு மிகப்பெரிய தன்னம்பிக்கை ஊக்குவிப்பாக அமையும்.

பாகிஸ்தான் போட்டியை இறுதிப் போட்டிக்கு முந்தைய இறுதிப் போட்டியாக நினைத்துக் கொள்ளவேண்டும். நான் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி என்றால் என்னை முழுதும் தயார்படுத்திக் கொள்வேன். அதனை என் வாழ்நாளின் முக்கிய போட்டியாக எப்போதும் கருதுவேன்.

விராட் கோலி சரியாக விளையாட முடியாமல் போனதற்கு அனுஷ்கா சர்மாவுடனான அவரது உறவே காரணம் என்ற ரீதியில் சூசகமாக கேட்கப்பட்ட கேள்விக்கு சூசகமாக பதில் கூறிய சேவாக், கிரிக்கெட் வீரர் மீது விமர்சனம் வைக்கும் போது அவரது ஆட்டம் மைதானத்தில் எப்படி இருக்கிறது என்ற அளவில மட்டுமே இருக்க வேண்டும். அவர் யாருடன் இருக்கிறார் என்பதன் மீது விமர்சனங்கள் செய்யக் கூடாது. என்றார்.

# ஒருநாள் போட்டி தரவரிசை தொடர்ந்தும் ஆஸி. முதலிடம்



(துபாய்)

ஒருநாள் கிரிக்கெட் போட்டி தர வரிசையில் அவுஸ்ரேலிய அணி தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது. ஒவ்வொரு போட்டி தொடர் முடிவிலும் அணிகள் மற்றும் வீரர்களின் தர வரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டு வருகிறது.

முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி முடிந்ததும் வெளியிடப்பட்ட தர வரிசையில், முத்தரப்பு போட்டியில் தோல்வியை சந்திக்காமல் சம்பியன் பட்டம் வென்ற அவுஸ்ரேலிய அணி (120 புள்ளிகள்) தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

இந்திய அணி (114 புள்ளிகள்) 2ஆவது இடத்திலும், தென்னாபிரிக்கா (113 புள்ளிகள்) 3ஆவது இடத்திலும், இலங்கை அணி (109 புள்ளிகள்) 4ஆவது இடத்திலும், இங்கிலாந்து அணி (104 புள்ளிகள்) 5ஆவது இடத்திலும், நியூசிலாந்து அணி (101 புள்ளிகள்) 6 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் அணி (96 புள்ளிகள்) 7ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் அணி (94 புள்ளிகள்) 8ஆவது இடத்திலும், வங்காளதேச அணி (75 புள்ளிகள்) 9ஆவது இடத்திலும், சிம்பாப்வே அணி (53 புள்ளிகள்) 10ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் (41 புள்ளிகள்) 11ஆவது இடத்திலும், அயர்லாந்து அணி (34 புள்ளிகள்) 12ஆவது இடத்திலும் இருக்கின்றன.

துடுப்பாட்ட வரிசையில் தென்னாபிரிக்க வீரர் டிவில்லியர்ஸ் (891 புள்ளிகள்) முதலிடத்தில் நீடிக்கிறார். தென்னாபிரிக்க வீரர் ஹசிம் அம்லா (867 புள்ளிகள்) ஒரு இடம் முன்னேறி 2ஆவது இடம் பிடித்துள்ளார். முத்தரப்பு தொடரில் ஜொலிக்காத இந்திய வீரர் விராட்கோலி (831 புள்ளிகள்) ஒரு இடம் சரிந்து 3ஆவது இடத்தில் இருக்கிறார். சங்கக்கார (இலங்கை) 4ஆவது இடத்தையும், டில்ஷான் (இலங்கை) 5ஆவது இடத்தையும, கனே வில்லியம்சன் (நியூசிலாந்து) 6ஆவது இடத்தையும், ஷிகர் தவான் (இந்தியா) 7-வது இடத்தையும், டோனி (இந்தியா) 8-வது இடத்தையும், குயின்டன் டீ கொக் (தென்னாபிரிக்கா) 9 ஆவது இடத்தையும், ஜோர்ஜ் பெய்லி (அவுஸ்ரேலியா) 10-வது. இடத்தையும், ரோகித் சர்மா (இந்தியா) 13ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

பந்து வீச்சு தர வரிசையில் பந்து வீச்சு சர்ச்சையில் சிக்கி உலக கோப்பை அணியில் இடம் பிடிக்காத பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல் முதலிடத்திலும், மேற்கிந்திய சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் 2ஆவது இடத்திலும் தொடருகின்றனர். தென்னாபிரிக்க வீரர் ஸ்டெயின் 3ஆவது இடத்திலும், இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் அண்டர்சன் 4ஆவது இடத்திலும், அவுஸ்ரேலிய வீரர் ஜோன்சன் 5ஆவது இடத்திலும் உள்ளனர். இந்திய வீரர்கள் புவனேஷ்வர் குமார் 5 இடங்கள் பின்தங்கி 13ஆவது இடத்தையும், ரவீந்திர ஜடேஜா 4 இடங்கள் சரிந்து 14ஆவது இடத்தையும் பெற்றனர்.

(வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின்)

# ஒருநாள் உதைபந்தாட்டம் வெற்றிபெற்றது உதயசூரியன்



(யாழ்ப்பாணம்)

வல்வை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடாத்திய ஒரு நாள் உதைபந்தாட்டத்தில் உதய சூரியன் அணி வெற்றி பெற்றது.

வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடாத்திய ஒரு நாள் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வல்வைக்கு உட்பட்ட 6 கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

கடந்த சனிக்கிழமை காலை ஆரம்பமான உதைப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் 3ஆம் இடத்திற்கான போட்டியில் ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக்கழகம் மோதியது.

இவ் ஆட்டத்தில் இரு அணிகளும் சமநிலையில் இருந்தமையால் சமநிலை தவிர்ப்பு உதைப்பந்தாட டத்தில் நேதாஜி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.


இறுதி ஆட்டத்திற்கான போட்டியில் இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழகம் மோதியது.

இவ் ஆட்டத்தில் 9:3 என்ற கோல் கணக்கில் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

சிறந்த தொடர் ஆட்ட நாயகன் விருதினை இளங்கதிர் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த வி.மதுசானும், இறுதி போட்டி ஆட்ட நாயகன் விருதினை உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த பா.வசந்தும், சிறந்த கோல்காப்பாளர் விருதினை அ.இதயராஜ் உம் பெற்றுக் கொண்டார்கள்.

வல்வைக்கு உட்பட்ட கழகங்களான ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக்கழகம், நேதாஜி விளையாட்டுக்கழகம், இளங்கதிர் விளையாட்டுக்கழகம், தருவில் ஐக்கிய இளைஞர் விளையாட்டுக்கழகம், உதயசூரியன் விளையாட்டுக்கழகம், சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியன பங்கு பற்றியிருந்தன.

# இசிதோர் றோ.க.த.விற்கு கிடைத்தது விளையாட்டு முற்றம்



யாழ்ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பின் நிதியுதவியில் ஏழாலை கிழக்கு இசிதோர் றோ.க.த பாடசாலை மாணவர்களுக்கு சிறுவர்களுக்கான விளையாட்டு முற்றமொன்று புதிதாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பாடசாலையின் அதிபர் சி.நல்லகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இசிதோர் முன்பள்ளியின் முன்னாள் ஆசிரியர் திருமதி-ஜேக்கப் அரியமலர், இசிதோர் இளைஞர்கள் அமைப்பின் தலைவர் வே.மயூரதன், செயலாளர் கு.கரிகரன், பொருளாளர் ஜே.டினேஸ் ஆகியோர் உட்படப் பெற்றோர்கள, பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தரம்-01 முதல் 05 வரையான மாணவர்கள் கல்வி பயிலும் மேற்படி பாடசாலையில் முன்னர் நிறுவப்பட்டிருந்த விளையாட்டு முற்றம் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. இந்த நிலையில் பாடசாலையின் அதிபர் விடுத்த வேண்டுகோளுக்கமைவாகச் சிறுவர்களுக்கான விளையாட்டு முற்றமொன்று அமைக்கப் பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். குறித்த விளையாட்டு முற்றத்தை அமைத்து தந்தவர்களுக்குத் அதிபர் தமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

# வதூஸனனின் துல்லியபந்துவீச்சு இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ்

Cricket

(கொக்குவில்)

விக்ரம் - இராஜன் - கங்கு ஞாபகார்த்தமாக கொக்குவில் வளரமதி சனசமூக நிலையம், வருடாந்தம் நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் போட்டியொன்றில் பி.வதூஸனனின் துல்லியமான பந்துவீச்சால் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் அணி, இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

30 ஓவர்கள் மட்டுப்படுத்தப் பட்ட இந்த சுற்றுப்போட்டியின் போட்டிகள், கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று, முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, 27 ஓவர்களில் 78 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஏ.ஜெயரூபன் 18, எல்.ஆதித்தன் 14 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, பி.வதூஸனன் 6 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைப் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், கே.கோகுலன், ஜே.ஜெரிக்துஸான், எ.டர்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

79 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி, மிகுந்த போராட்டத்தின் மத்தியில் 22.1 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் எ.டர்வின் 15 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் கொக்குவில் அணி சார்பாக எஸ்.தரிதரன் 6 ஓவர்கள் பந்துவீச்சி 11 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், பி.பார்த்தீபன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றி மூலம் சென்றல்லைட்ஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று. ஏற்கனவே இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ள ஜொலி ஸ்டார்ஸ் அணியுடன் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறும் இறுதிப்போட்டியில் மோதவுள்ளது.

இறுதிப்போட்டி 40 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்



யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலய 2015 ஆம் ஆண்டின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வை முன்னிட்டு நடாத்தப்பட்ட மரதன் ஓட்ட நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஆண் மற்றும் பெண் வெற்றியாளர்கள் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் விருந்தினர்களுடன். (48)

# உலகக் கிண்ண கிரிக்கெட் விலகுகிறார் பாக்.வீரர்

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இடம் பிடித்துள்ள இடது கை வேகப்பந்து வீச்சாளர் ஜுனைத் கான் தசைப்பிடிப்பால் அவதிப்பட்டு வந்தார்.


அவருக்கு நேற்று முன்தினம் உடற் தகுதி சோதனை நடாத்தப்பட்டது. இதில் தகுதி பெறாததால் ஜுனைத் கான் உலகக்கிண்ண போட்டியில் இருந்து விலகி உள்ளார்.

சயீத் அஜ்மல் பந்து வீச்சு சர்ச்சையில் விலகிய நிலையில் ஜுனைத் கானும் விளையாடாமை பாகிஸ்தான் அணி பந்து வீச்சை மேலும் பலவீனப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



எட்டாவது கூட்டுச் சேரா மாநாட்டில் பாலஸ்தீனத் தலைவர் யசர் அரபாத் ஈரானைப் பற்றி சற்று கடுமையாகப் பேசிவிட்டார். "இதற்கு பதில் கூறும் உரிமை தங்களுக்கு உள்ளது. எனவே தாங்கள் பேச

# பதிலளிக்கும் உரிமையை பயன்படுத்தாதீர்கள்!




அனுமதிக்க வேண்டும் என்று ஈரானிய பிரதிநிதி அயத்துல்லா கொமேனி கேட்டாராம். அப்படி இடம் கொடுத்தால் சிக்கலாகிவிடும் என்பதால் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி, கொமேனியிடம் "நான் இந்தியாவின் பிரதமராக அல்ல. ஈரானிடம் நட்புக் கொண்ட நண்பராகக் கேட்கிறேன். தயவு செய்து அரபாத்துக்கு பதிலளிக்கும் உரிமையை நீங்கள் பயன்படுத்தக் கூடாது." என்று கேட்டுக் கொண்டாராம்.

அதற்கு கொமேனி "இந்தியப் பிரதமரே வந்து என்னிடம் இப்படிக் கேட்கும்போது எப்படி மறுக்கமுடியும்?" என்று ஒப்புக்கொண்டாராம்.

(நட்வர்சிங் எழுதிய **One Life is Not Enough** நூலில்)

# எப்படியெல்லாம் கவருகிறார்கள்!



சீனாவின் செங் கோஜ் நகரில் உள்ள ஒரு பிரபல உணவகத்தில் ஆச்சரியமளிக்கும் ஓர் அறிவிப்புப் பலகை மாட்டப்பட்டிருக்கிறது.

ஆம், "நீங்கள் அழகாக இருந்தால், எங்கள் உணவகத்தில் இலவசமாக சாப்பிடலாம்..." என, அந்த அறிவிப்பில் எழுதப்பட்டுள்ளது. அதற்காக, சாப்பாட்டு ராமன்கள் எல்லாம், "நானும் தான் அழகு" எனக் கூறி, அவ்வளவு சாதாரணமாக, ஓசியில் ஒரு கட்டுக் கட்ட வந்து விட முடியாது.

உணவகத்தின் நுழைவாயிலிலேயே, நம் அழகை மதிப்பீடு செய்து, புள்ளிகள் போடுவதற்கு அழகுக் கலை நிபுணர்கள் அடங்கிய நடுவர் குழு உள்ளது. இந்தக் குழு, உணவகத்துக்கு வருவோரின், சிகை அலங்காரம், மூக்கு, வாய், காது, கழுத்து, அணிந்துள்ள உடை ஆகியவற்றை மதிப்பீடு செய்து, புள்ளிகள் அளிக்கும். அதிலும், நெற்றி அழகிற்கு தான், அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தினமும், இந்த நடுவர் குழுவால், அதிக புள்ளிகள் வாங்கும் ஐந்து பேர், அங்கு ஓசியாக சாப்பிடலாம்.

# கர்ப்பிணி பெண்கள் கவனிக்க...



★ கர்ப்பமான பெண்களுக்கு பிரசவிக்கும்போது, விற்றமின் "டி" கூடுதலாக உடலில் இருந்தால், பிரசவம் சிரமப்படாமல் நடக்கும். இந்த விற்றமின் "டி" ஐ எளிதில் பெற வழி - தினமும் சிறிது நேரம் கர்ப்பவதிகள் தன்மேல் வெயில் படும்படி பார்த்துக் கொண்டால் போதும்.

★ கிட்னியில் கல் இருப்பதற்கும் எலும்புகள் உடைந்து தொல்லை தருவதற்கும் சம்பந்தம் உண்டாம்! இப்படிக் கூறுகிறது ஓர் ஆய்வு. அதாவது கல் இல்லாதவர்களைவிட, கல் இருப்பவர்களுக்கு எலும்புகள் உடைதல் விஷயத்தில் அதிக ரிஸ்க் உண்டு என்கிறது ஆய்வு.

★ உலக சுகாதார அமைப்பின் ஆய்வின்படி, உலகில் 30 கோடி பேருக்கு காது கேட்பதில் சிக்கல் உள்ளது.

★ எதைச் சாப்பிட்டாலும் மெதுவாகச் சாப்பிடுங்கள். ஏனெனில், வேகமாகச் சாப்பிட்டால் உடம்புபக்க வாட்டில் வேகமாக வளரும் என ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர்.

# போராளிகளின் தியாகங்களைக் கொச்சைப்படுத்தும் மாகாணசபை



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

வடக்கு மாகாண சபையிலை உருப்படியான ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குது. அதுதான் மாவீரர் குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்ற போராளியளின்ரை குடும்பங்களுக்கு உதவி செய்யப் போறம் எண்டு எங்கடை மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் அறிவிச்சிருக்கிற விசியம்.

"ஆனால் இது வெறும் புலுடா. இதிலை எங்கடை பேரைக் குடுத்து உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன் எண்ட நிலையிலைதான் இருக்க வேண்டி வரும்" எண்டு சொன்னார் ஒரு மாவீரரின்ரை தகப்பனார். "ஏனப்பிடிச் சொல்லுறியள்?" எண்டு கேட்டன்.

"பின்னை என்ன அண்ணை! அம்பதாயிரத்துக்கும் மேலை மாவீரர்கள் இருக்கினை பன்னிரண்டாயிரம் புனர்வாழ்வு பெற்ற போராளியள் இருக்கினை. இவ்வளவு பேருக்கும் உருப்படியாய் உதவி செய்யிறதெண்டால் மாகாண சபையின்ரை நிதி காணுமே? மத்திய அரசாங்கத்திட்டை இதுக்கெண்டு காசு கேக்கேலுமே? கேட்டாலும் சிங்களச் சனம் விடுமே? புலம்பெயர்ந்தவரிட்டை வாங்கிறதெண்டாலும் அதை நேரடியாய் வாங்கேலுமே?

சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது பாருங்கோ. உது எத்தினை மாவீரர் குடும்பமிருக்குது? எத்தினை புனர்வாழ்வு பெற்ற போராளியள் இருக்கினை? எண்ட தரவைச் சேகரிக்கிறதுக்குத்தான் உதவும். அல்லாட்டில் வருகிற நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஸ்டன்டாய் இருக்கும்" எண்டு சொன்னார் அவர்.

அவர் சொல்லுறதிலையும் ஞாயம் இருக்குது பாருங்கோ. வீணாகத் தரவைக் குடுத்து வில்லங்கத்திலை மாட்டுப்படக் கூடாது எண்டதிலை சில பேர் உறுதியாக இருக்கினை மற்றது உவ்வளவு பேருக்கும் உவையாலை உதவி செய்யேலாதுதான். அப்பிடியெண்டால் தருமப் பணம் போலை கொஞ்சம் கிள்ளித் தெளிக்கலாம். அவ்வளவுதான்.

இதிலை இன்னொரு அபாயமும் இருக்குது. கிடைக்கிற தரவை வச்சுக் கொண்டு இவ்வளவு மாவீரர் குடும்பங்கள்தான் இருக்கினை. இவ்வளவு போராளியள்தான் இருக்கினை எண்டு சில ஆயிரம் பேரை மட்டும் காட்டிற வேலையும் நடக்கும். ஏதாவது பிரச்சினையெண்டால் அவ்வளவு பேருக்கும் தலையிடி குடுக்கிறதாயும் இருக்கும்.


இப்பிடி டெனீஸ்வரன் பேசினாப் பிறகும் மூண்டு சென்மங்கள் மாகாண சபையிலை பேசாமடந்தையளாய் இருந்தினை பாருங்கோ! அதுதான் மன்னிக்கேலாத குற்றம். சித்தரை நம்பி வந்து புளொட்டிலை இருந்து உயிரை மாய்த்த போராளியள். சிவாசியாராலை உசுப்பேத்தப்பட்டுச் செத்துப் போன ரெலோ பெடியள். சர்வேஸ் கதிரையிலை இருக்கக் காரணமாகி இறந்து போன ஈ.பி.ஆர்.எல்.எப். போராளியள்.

இவையெல்லாம் தேசத்துரோகியள் எண்டு கருதுகிறாரோ டெனீஸ்வரன். அதை இந்த சென்மங்கள் வழி மொழியினமோ? அந்த ஆத்துமாக்களின்ரை ஆவியள்தான் வந்து இவையைக் கேள்வி கேக்க வேணும்.

இன்னும் ஈரோஸ், என்.எல்.எப்.ரி, ஈ.பி.டி.பி., ஈ.என்.டி.எல்.எப்., ரெலா இயக்கங்களிலை இருந்து இறந்து போனவையெல்லாம் ஆர்? அவை போராடேல்லையே? அவை தங்கடை வீட்டுக்காகச் செத்தவையே?


யாழ்ப்பாணத்திலையும், வன்னியிலையும் நடந்த பெருந் தாக்குதல்களிலை எல்லாம் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பல பத்தாயிரம் புலிப் போராளியள் தங்கடை உயிரைக் குடுத்தவை. அதுகளின்ரை குடும்பங்களெல்லாம் நிர்க்கதியாயெல்லே நிக்கினம். அவையை ஆர் கவனிக்கிறது? அதுக்கான பொறுப்பு டெனீஸ்வரனுக்கோ, மாகாணக் கதிரையளிலை உட்கார்ந்து இருக்கிற மற்ற ஆக்களுக்கோ இல்லையே?

வரலாறு தெரியாதவனெல்லாம் அமைச்சுக் கதிரையிலை இருந்தால் இதுதான் நடக்கும் பாருங்கோ. இதே எல்லா இயக்கங்களின்ரை குடும்பங்களும் சேர்ந்துதானே ஆட்சிபீடம் ஏத்தினவை எண்டதை வசதியாய் மறந்துதான் இவை கதைக்கினை. இதைக் கேட்டு முன்னுக்குச் சொன்ன சென்மங்கள் போலை பேசாமடந்தையளாய் மக்களும் இருக்கலாமே?



உதவி செய்யிறதெண்டு வெளிக்கிட்டால் அதிலை பாரபட்சம் காட்டக் கூடாது. எல்லாருமே நாட்டு விடுதலை எண்ட இலக்கோடை போய்த்தான் செத்துப் போனவை. ஒவ்வொருத்தரும் தங்கடை இயக்கங்களின்ரை வழியிலை போய் அந்த இலக்குக் கனவோடைதான் உயிர் விட்டவை. வரலாறு துன்பியலாகப் போனதாலை அதுகளின்ரை தியாகத்தைக் கொச்சைப்படுத்தேலுமே? ஆக பிள்ளையார் எண்டு நினைச்சுப் பிடிச்ச மாகாண சபை வர வரக் குரங்காய் உருமாறி வந்து கொண்டிருக்குது உந்தக் குரங்கு கையிலை அகப்படுகிற பூமாலையாய்தான் எல்லாரும் இருக்கப் போறம். அது எங்களைச் சிப்பிலியாட்ட அதை நாங்கள் பாத்துக் கொண்டிருக்கப் போறம். நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிசரை நினைஞ்சு விட்டால் எண்டு பாடி மனத்தைத் தேற்றுவம். வேறென்ன செய்ய?

# இலங்கையில் ஜனாதிபதியின் அதிகாரத்துவம்! நாடாளுமன்ற ஆட்சி முறை! மக்களுக்கான அதிகாரம்!




(நேற்றைய தொடர்ச்சி)

- யோகா - ராஜன் — 02

நாட்டின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நீதித்துறை, நிர்வாகத்துறை, சட்டமியற்றும்துறை ஆகிய மூன்று துறைகளும் ஒப்பீட்டளவில் சுயாதீனம் மிக்க தனித் தனித் துறைகளாகப் பிளவுபடுத்தப்பட வேண்டும். இம் மூன்று துறைகளும் சுயாதீனமாக இயங்குவதற்கேற்ற வகையில் பிளவுபடுத்தப்படாத வரை, எந்த ஓர் அரசும், நாடாளுமன்ற முறைமையிலோ அன்றி ஜனாதிபதி ஆட்சியிலோ மக்களுக்கு சிறந்த நிர்வாகத்தையோ, வழிகாட்டலையோ வழங்கமுடியாது.

இவ்வித அதிகாரப் பிளப்பு முறைமை என்பது எதிர்காலத்தில் அதிகாரங்களை வலுவிழக்கச் செய்கின்ற ஒரு முன்னேறிய சமூகத்தைக் கட்டியமைப்பதற்கான முன்நோக்கிய வழிமுறைகளாக அமைவதற்கும் வாய்ப்புண்டு! அதேவேளை இங்கு நாம் பின்னவீனத்துவ சமூகங்கள் பற்றியோ, நுண்ணதிகாரங்களின் பிறப்பிடங்களாக விளங்கக் கூடிய குடும்பம், கல்வி நிறுவனங்கள், மதபீடங்கள் போன்ற சமூக நிறுவனங்கள் பற்றியோ பேசவில்லை.

மாறாக ஒரு முன்னேறிய சமூகத்தைக் கட்டமைப்பதற்கான முன்நிபந்தனைகள் அல்லது முன்னோக்கிய வழிமுறைகள் பற்றியே இங்கு நோக்குகிறோம். அதாவது வளர்ச்சி குன்றிய ஜனநாயக முறைமைகளுக்குள் உட்பட்டு உழலுகின்ற நாடுகளுக்கான மக்கள் ஜனநாயகம் பற்றியும் அவர்களுக்கான அதிகாரம் பற்றியுமே இங்கு குறிப்பிடுகின்றோம். நாட்டில், குறிப்பிட்ட சிலரிடம் அல்லது பகுதியினரிடம் மட்டும் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை பரவலாக்குவது பற்றி உரையாடவே விரும்புகிறோம்.

ஆங்கிலேயர் காலந்தொட்டு நாடாளுமன்ற வழிமுறையினூடாக டி.எஸ். சேனநாயக்கா, சிறிமாவோவின் தந்தை ரத்வத்தை ஊடாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா குடும்பத்திடம் குவிந்திருந்த அதிகாரங்களை, இக் குடும்பங்களிடமிருந்து பறித்துக்கொள்வதற்கான எத்தனிப்பாகவும், அதிகாரங்களை மேலும் மையப்படுத்தி குவித்துக் கொள்ளும் நோக்கிலும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் அறிமுகப்படுத்தப்பட்டதுதான் இன்றைய நீதித்துறை, நிர்வாகத்துறை, சட்டமியற்றும்துறை ஆகிய மூன்று துறைகளையும் ஒருங்கே கொண்ட, மிக இறுகிப்போன மையப்படுத்தப்பட்ட ஜனாதிபதி ஆட்சி முறைமை.

இத்தகைய மையப்படுத்தப்பட்ட அதிகார முறைமையை பிளவுபடுத்தி சுயாதீனமாக இயங்க வைப்பதன் மூலமே அதிகாரத்தைப் பரவலாக்க முடியும். அதுவே அதிகார மையத்தில் ஓரளவுக் கேனும் தளர்வுநிலையை ஏற்படுத்துவதற்கும் வழிசெய்யும்.

நீதித்துறை, நிர்வாகத்துறை, சட்டமியற்றும்துறை என்று அதிகாரங்கள் பிளக்கப்படுகின்றபோது, குவிக்கப்பட்டிருந்த அதிகார மையத்தில் உடைவு ஏற்படுகிறது. இதுவே இனரீதியாக, பிரதேசரீதியாக, பால்ரீதியாக, வர்க்கரீதியாக என்று இன்னோரன்ன குழுமங்களிடமும் அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதற்குமான வாய்ப்பை ஏற்படுத்துகிறது! அதிகாரங்கள் மேலும் மேலும் பிளக்கப்படுவதன் மூலம் அவை மேலும் மேலும் சிதைக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்துகிறது.

அதேவேளை இன்றைய சூழலில் மையஅரசு நீதித்துறை, நிர்வாகத்துறை, சட்டமியற்றும்துறை ஆகிய மூன்று துறைகளையும் பிளப்பதன் மூலமோ, அன்றி மாகாணசபைகளை நோக்கி அதிகாரங்களை வழங்குவதன் மூலமோ, இவை மட்டுமே மக்களுக்கான அதிகாரத்தை பரவலாக்குவதற்கான வழிமுறையாக அர்த்தம்கொள்ள முடியாது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

அடிமட்ட மனிதர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தம்மை தாமே உருவாக்கி, நிர்வகிக்கும் அதிகாரம் ஒன்று அவர்களால் உணரப்பட வேண்டும். இவ்வகையில் சனசமூக நிலையங்கள், மதரீதியான பரிபாலன சபைகள், பாடசாலை ரீதியிலான பெற்றார் ஆசிரியர் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல்வகை சமூக நிறுவனங்கள் இயங்கி வருவதை கிராமங்களில் சாதாரணமாக காணலாம்.

அதாவது கிராமங்களை நோக்கி அதிகாரங்களை பரவலாக்குதல் என்பதை விட, அதிகாரங்கள் கீழிருந்து நிறுவப்படும்போது மட்டுமே ஒப்பீட்டளவில் சிறந்த சமூக ஜனநாயக அரசு ஒன்றை தோற்றுவிக்க முடியும்! இங்கு நாம் குறிப்பிடுவது, சிறிய அலகுகளாக விளங்குகின்ற கிராமங்களுக்கான அதிகாரம் பற்றியே. சிறிய நிர்வாகம் அதுவே சிறந்த நிர்வாகம்.

அதாவது, கிராமங்களை இயலுமானவரை தன்னிறைவை நோக்கி நகர்த்தும்பொருட்டு மைய அரசும், கிராம மக்களும் இணைந்து உழைக்கும் போதுதான் ஓர் அற்புதமான நாடு உருவாகும். ஒரு நாட்டில் ஒரு கிராமத்தை வழிநடத்தும் பொருட்டு பல அதிகார மையங்கள் இருக்க முடியும். சுவிசைப் பொறுத்தவரை கிராமங்களைக் கண்காணிப்பதில் மாநில அரசும் மைய அரசும் பங்கெடுத்துக்கொள்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை, நீர், நிலம் மீதானதும், ஆரம்பக் கல்வி முறைமையை தீர்மானிப்பதற்கான அதிகாரமும், வரி வசூலிப்பதற்கான உரிமையும் கிராம மன்றங்களுக்கு உரியவையாகவே மாற்றப்படவேண்டும். கிராமங்களை மேலோட்டமாக பரிபாலனம் செய்வதையே மைய அரசுகள் தமது கடமையாகக் கொண்டிருக்க வேண்டும். அதுவே மக்களுக்கான அரசாக இருக்க முடியும்.

ஆனால் சமூக ஜனநாயக முறைமை வளர்ச்சியடையாத எமது இன்றைய சமூகச் சூழலில் பொதுவாக இலங்கை, இந்தியா போன்ற ஆசியச் சூழலில் கிராமங்கள் சாதியரீதியிலும் வேறு பல முறைமைகளிலும், வழிகளிலும் குறிப்பிட்ட சில குடும்பங்களின் கட்டுக்குட்பட்டிருப்பது கண்கூடு. இந் நிலைமைகளில் கிராமங்களுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கு முன் நிபந்தனையாக கிராமரீதியான சமூகநிறுவனங்களில் ஜனநாயகத்தை பேணுவதற்குரிய வழிமுறைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

அதாவது தனிமனிதன் சுதந்திரமாக தனது கருத்தை முன்மொழிவதற்கான கருத்துச் சுதந்திரத்தைக் கட்டமைக்கவேண்டியது கட்டாயமாகிறது! இதன் பொருட்டு சமூக பண்பாட்டில் மாற்றங்களை உண்டுபண்ணும் வகையிலான சிற்றரசியல் வேலைமுறைகளை மேற்கொள்ள வேண்டியது அடிப்படையாகிறது! அதேவேளை நாம் இங்கு அதிகாரமுறைமைகள் அற்ற கம்யூனிஸ சமூகம் பற்றிக் குறிப்பிடவில்லை. அதேபோன்று பின்னவீனத்துவ சமூகங்கள் பற்றியோ, நுண்ணதிகாரங்களின் பிறப்பிடங்களாக விளங்கக் கூடிய குடும்பம், கல்வி நிறுவனங்கள், மதபீடங்கள் போன்ற சமூக நிறுவனங்கள் பற்றியும் பேசவில்லை.

நாம் மேலே குறிப்பிட்டுள்ள மக்களுக்கான, கிராமங்களுக்கான அதிகாரங்கள் பற்றி உரையாடுவதற்குரிய சூழல் கூடிவரும் பட்சத்தில் மட்டுமே, அதிகாரம் பற்றிய நுண் வரைவுக்குள் நாம் செல்ல முடியும். அதுவே அதிகாரம் அற்ற கம்யூனிஸ சமூகம் பற்றிப் பேசுவதற்குரிய யதார்த்த சூழலாகவும் அமையும்.

நாம் புரிந்துகொள்ளவேண்டிய முக்கிய அம்சம், இன்றைய காலகட்டத்தில் மக்களை நிர்வகிப்பதற்கு பெரும்மையாகவோ அன்றி நுண்மையாகவோ சாதாரண நிறுவனங்கள் முதற்கொண்டு, சமூகரீதியான அனைத்துத் தளங்களிலும் ஏதோவொரு வகையில் ஓர் அதிகார முறைமை தவிர்க்க முடியாததாகிறது!

ஆனால் பஸ் நடத்துனர் முதல் ஆஸ்பத்திரி தாதியர் வரை மக்கள் மீது செலுத்தப்படும் அதிகாரத்துவம், பண்பாட்டுடன் பொருத்திப் பார்க்கப்பட வேண்டிய ஒன்று! இவற்றை ஆரம்ப கால நவீன சமூகத்தின் அல்லது நவீனத்துவத்துக்கு முந்தைய நிலவுடமைச் சமூகத்தின் மிச்ச சொச்சமாகவும் புரிந்துகொள்ள முடியும்.

ஒப்பீட்டளவில் உயர் ஜனநாயகத்தை நோக்கிய வளர்ச்சி, அரசும் சிவில்சமூகமும் முரண்பட்டும் முரண்படாமலும், சேர்ந்தும் பிரிந்தும் அமையக் கூடிய வளைவும் சுழிவும் நிறைந்த சாணக்கியம் மிக்க பயணத்தின் ஊடாகவே சாத்தியமாகிறது. ஆனால் இத்தகைய ஒரு நடைமுறையில் முன்நிபந்தனையாக தேவைப்படுவது மக்களின் பங்களிப்புடன் கூடிய ஒட்டுமொத்த அரசியல் சீர்திருத்தமே!

**"அரசு என்பது மக்களை நிர்வகித்து, வழிநடத்திச் செல்வதற்கான கருவியாகவே அமையவேண்டும்! மாறாக அவர்கள் மீது அதிகாரத்தைச் செலுத்துவதற்கான வன்முறைக் கருவியாக அமைந்துவிடக் கூடாது!"**

---

# "சொன்னால் நம்ப மாட்டீர்கள்" நூலில் சின்ன அண்ணாமலை:

அப்போதெல்லாம் அண்ணாதுரையை காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள், மிகச் சாதாரணமாக நினைத்து, துச்சமாகப் பேசுவோம். அரசியல் மேடையில், எவ்வளவோ காரசாரமாக அண்ணாதுரையை தாக்கிப் பேசியிருக்கிறேன். ஆயினும், அண்ணாதுரையை நேரில் சந்திக்கும்போது, அதையெல்லாம் கண்டுகொள்ளவோ, கோபப்படவோ மாட்டார். நான், "தமிழ்ப் பண்ணை" என்ற பதிப்பகம் துவங்கி, நூல்களை வெளியிட்டு வந்தேன்.




அண்ணாதுரை கதை, வசனம் எழுதிய, வேலைக்காரி படத்தின் நூறாவது நாள் விழாவில் அவர் பேசும்போது, "நாமக்கல் கவிஞரின் ஆற்றலை நாடறியச் செய்தவர், ஏன், நானறியச் செய்தவர் சின்ன அண்ணாமலை. என், வேலைக்காரி நாடகம், திரைப்படமாக உருவாகி, நூறு நாள் ஓடியிருக்கிறது. அதற்காக நான் அகந்தை அடையவில்லை. என்னை விட மிகச் சிறந்த கதைகளை எழுதக்கூடியவர் நாமக்கல் கவிஞர். அவர் எழுதிய, மலைக்கள்ளன் என்ற நாவலைப் படித்து, நான் பிரமிப்படைந்தேன்.

இந்த, மலைக்கள்ளன் நாவல், நாமக்கல் கவிஞரால் எழுதப்பட்டு, பல ஆண்டுகளாக கேட்பாரற்று, கையெழுத்துப் பிரதியாகக் கிடந்திருக்கிறது. கவிஞரின் ஆற்றலை அறிந்த சின்ன அண்ணாமலை, இந்த அரிய கருவூலத்தைத் தேடி எடுத்து, கண் கவரும் அழகிய நூலாக வெளியிட்டிருக்கிறார். வேலைக்காரியை விட பல மடங்கு சிறப்பான கதை மலைக்கள்ளன். அதை யாராவது நல்ல முறையில் திரைப்படமாக்கினால், நிச்சயம் தமிழ்த்திரைப்படத் துறைக்கு, ஒரு நல்ல தமிழ்ப் படம் கிடைக்கும்.

ஆற்றல் மிக்கவர் நாமக்கல் கவிஞர் அவரது ஆற்றலை உலகறியச் செய்தவர் சின்ன அண்ணாமலை. ஆகவே தான், இந்த இருவரையும், இந்த விழாவுக்கு அழைக்கச் சொன்னேன்..." என்று பேசினார் அண்ணாதுரை.

சொன்னால் நம்பமாட்டீர்கள்... அன்று மாலையே நாராயணன் கம்பெனி முதலாளி, என்னை ஸ்டூடியோவுக்குக் கூட்டிப் போய், ஸ்ரீராமு நாயுடுவிடம், மலைக்கள்ளன் கதையைச் சொல்லச் சொன்னார்; சொன்னேன். கதை அவர்களுக்கு பிடித்தது; படமாக எடுத்தனர்.

எம்.ஜி.ஆர்., பானுமதி நடிக்க, படம் பிரமாத வெற்றி பெற்றது.

எம்.ஜி.ஆருக்கும் சினிமாத் துறையில், அந்தப் படத்தின் மூலம் புதிய திருப்பம் ஏற்பட்டது.

மலைக்கள்ளன் திரைப்படமாவதற்குக் காரணமாக இருந்த அண்ணாதுரையை, நானும், நாமக்கல் கவிஞரும் சந்தித்து, அவருக்குப் பொன்னாடை போர்த்தி, மாலை, மரியாதை செய்து, எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டோம்.




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகமும் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கமும் இணைந்து நடாத்திய இலவச மருத்துவ முகாமில் லயன்ஸ் கழகத்தினர் இரத்த தானம் செய்வதைக் காணலாம். (02)

# விபத்துக்கள், வாகனநெரிசலைத் தடுக்க

# நெல்லியடி நகரில் புதிய நடைமுறை

## போக்குவரத்து பொலிஸார் அறிவிப்பு

(நெல்லியடி)

நெல்லியடிப் பகுதியில் இடம் பெறும் விபத்துக்கள் மற்றும் வாகன நெரிசல்களை தவிர்க்கும் வகையில் நெல்லியடி பிரிவு போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

நெல்லியடி நகரப் பகுதியில் வாகனங்களை நிறுத்துவதற்கு ஒரு நடைமுறையை அமுல்படுத்தியுள்ளதுடன் இந்நடைமுறை நேற்று முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில் நெல்லியடி நகரப் பகுதியில் தெற்குப் பக்கம் ஒரு நாளும் வடக்குப் பக்கம் ஒரு நாளுமாக மாறி மாறி வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும் என பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை பின்பற்றாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை வர்த்தகர்கள் வீதி ஓரங்களில் பொருட்களை காட்சிப்படுத்துவது முற்றுமுழுதாக தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் இத்தகைய நடைபாதை வியாபாரங்களாலேயே வாகன நெரிசல்கள் ஏற்படுவதாகவும் இதனைத் தடுக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் நகரப்பகுதியில் ஆங்காங்கே துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்களை நிறுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே விபத்துக்கள் மற்றும் வாகன நெரிசல்கள் ஏற்படுவதை தடுப்பதற்கு பொதுமக்கள் குறித்த நடைமுறைகளைப் பின்பற்றி பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என போக்குவரத்து பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (18)

# திருடப்பட்ட ஆடும் குட்டிகளும் உரிமையாளரிடம் கையளிப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை மாதனை பகுதியில் களவாடப்பட்ட ஆடும் குட்டிகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்ட நிலையில் அண்மையில் அவை உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த ஆடு திருடப்பட்ட நிலையில் பருத்தித்துறை பொலிஸார் ஆடு திருடிய திருடனை கைது செய்ததுடன் ஆட்டையும் மீட்டு பொலிஸ் நிலையத்தில் வைத்து பராமரித்தனர்.

பின்னர் ஆடு குட்டிகள் ஈன்ற நிலையில் அவையும் பராமரிக்கப்பட்டு வந்தநிலையில் அண்மையில் புலோலி வடக்கு பகுதியைச் சேர்ந்த இராசநாதன் மேர்வின் என்பவர் ஆட்டை அடையாளம் காட்டி உறுதிப்படுத்திய நிலையில் பொலிஸார் உரிமையாளரிடம் அதனைக் கையளித்தனர். (18)

# யாழ்.இந்து மாணவர்களின் கல்விக்கான செயற்றிட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துவின் "2005 இந்துவின் மைந்தர்களால்" 2015 ஆம் ஆண்டின் கல்விக்கான செயற்றிட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இச் செயற்றிட்டத்திற்காக வன்னிவிளாங்குளம் அ.த.க பாடசாலை, கல்விளான்குளம் அ.த.க.பாடசாலை, கோட்டைகட்டிய குளம் அ.த.க பாடசாலை, கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலை, பாலைப்பாணி அ.த.க.பாடசாலை ஆகிய 5 பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 1 இல் கல்வி பயிலும 52 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இம் மாணவர்களுடைய குடும்பங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கி இருந்ததோடு அச்சிறார்கள் நீண்டதூரம் நடந்தே பாடசாலைக்கு வர வேண்டி இருந்தது. இதனைக் கருத்தில் கொண்டே இம்மாணவர்களுக்கு உதவும் வகையில் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், காலணிகளும் அதிபர்களூடாக நேரடியாக வழங்கப்பட்டன. (48)

# கால்நடை உற்பத்தி அபிவிருத்திக்கு 42 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைகளத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு 42 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.வசீகரன், நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், வாழ்வாதாரம், இனவிருத்தி, திணைக்கள கட்டமைப்பு என மூன்று பிரிவுகளாக செலவுப் பட்டியலை நிதி ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ளோம். இதன்படி அனுமதி கிடைக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

மத்திய கால்நடை அமைச்சால் 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் கால்நடை வைத்தியர்களுக்கு விடுதிகளும் அமைக்கவுள்ளோம்.

இந்திய அரசின் நிதியுதவியில் நல்லின மாடுகள், விவசாய உபகரணங்கள், பால் பதனிடும் இயந்திரங்கள் மற்றும் பயிற்சிகள் வழங்குமாறு யாழ்.இந்தியத் துணைத்தூதர் ஏ.நடராஜனிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். அவர் சாதகமாக பரிசீலிப்பதாகத் தெரிவித்துள்ளார் என வசீகரன் மேலும் கூறினார்.

## முரசின் இன்றைய பலன்

(04.02.2015 புதன்கிழமை)

ஜய வருஷம் தை மாதம் 21 ஆம் திகதி.
பிரதமைத் திதி. மரணயோகம்.
ஆயிலிய நட்சத்திரம் மு.இ. 11.41 வரை. பின் மகம்.
இராகு காலம 12.35 - 02.05 வரை. சுபநேரம 05.05 - 06.35 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
ஈகோ மனப்பாங்கினால் கவினை நிலை பாதிக்கப்பட்டு முரண்படுதல்.

**ரிஷபம்**
நிலுவையின் ஒருபகுதி வந்தடைவதால் நிம்மதி.

**மிதுனம்**
தடைப்பட்டிருந்த சுப காரியம் வெற்றிதரல்.

**கடகம்**
தொழில் நிமித்தம் தற்காலிக பிரிவு ஏற்படல்.

**சிம்மம்**
கடனை அடைக்க மேலும் கடன்பெற உத்தேசித்தல்.

**கன்னி**
கொள்கைப்பிடிப்பின்றி திரியும் புதல்வனை எண்ணி கவலையடைதல்.

**துலாம்**
செய்தொழிலில் ஊக்கம் காட்ட ஊழியரை வற்புறுத்தல்.

**விருச்சிகம்**
ஏழரைச்சனி இருப்பதினால் புதிய முயற்சியில் ஈடுபாடு காட்டத தயங்குதல்.

**தனுசு**
அட்டமத்துக்குரு இருப்பதினால் உதவி செய்யப்பின்னடித்தல்.

**மகரம்**
வக்காளத்து நிலைப்பாட்டினால் சச்சரவுண்டாதல்.

**கும்பம்**
நோய் அகல தெய்வ பிரீதி செய்ய முற்படல்.

**மீனம்**
பயணம் இடைத்தங்கல் நாட்டில் இறக்கிவிடுதல்.

# அறுவடைக்கு தயாராகும் நெற்பயிர்கள்

# யானைகள், மாடுகளால் அழிவடையும் அபாயம்

## - நடவடிக்கை எடுக்குமாறு ஒட்டுசுட்டான் விவசாயிகள் கோரிக்கை -

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் மாங்குளம் பிரதேசத்தில் இம்முறை நெற் செய்கையில் அதிக விளைச்சல் ஏற்பட்டுள்ள போதிலும், அறுவடைவரை அவற்றைப் பாது காப்பது சவால் நிறைந்ததாக காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் இம்முறை நெல்லில் அதிக விளைச்சல் ஏற்பட்டுள்ளது. இது மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக இருந்தாலும் யானைகள் மற்றும் மாடுகளால் தாம் பாரிய நெருக்கடிகளை எதிர் நோக்குவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அறுவடைக்கு தயாராகும் நெற்பயிர்களை பகல் வேளைகளில் மாடுகளும், இரவு வேளை களில் யானைகளும் வந்து நாசமாக்குவதால் தாம் பகலிலும் தொடர்ந்து இரவிலும் நித்திரை விழித்து நாளாந்தம் காவல் காக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக் கின்றனர்.

இம்முறை மழை பெய்த போதிலும் நெல் அமோக விளைச்சல் ஏற்பட்டுள்ளதாகவும் அதிக செலவு செய்து நெற்செய்கையை மேற் கொண்ட நிலையில் நன்மையைப் பெறும் தருணத்தில் உள்ள நாம் யானைகள் மற்றும் கட்டாக்காலி மாடுகளால் நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படுமோ என அஞ்சுவதாக விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே நெல் அறுவடை வரை யானைகள் மற்றும் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்க உரிய அதிகாரிகள் முன்வரவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வல்வை ஒன்றியத்தை மீளவும் அங்குரார்ப்பணம் செய்ய கோரிக்கை

(வல்வை)

வல்வை ஒன்றியத்தின் செயற்பாடுகள் திறனற்று காணப்படும் நிலையில் அவற்றை செயற்படுத்தும் வகையில், மீள அங்குரார்ப்பணம் செய்யுமாறு வல்வை பொதுமக்கள் கோரிக் கையை முன் வைத்துள்ளனர்.

அவர்கள் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

வல்வை மக்கள் ஆகிய நாம் கடந்த காலத்தில் செயற்றிறன் அற்றுக்கிடக்கும் நிர்வாகத்தை எமது வல்வையின் சமூக அபி விருத்தி கருதி எதிர் காலத்தில் செயற்படக்கூடிய புதிய நிர்வா கத்தை தெரிவு செய்து எதிர் கால சந்தததியின் கையில் ஒப் படைத்து சிறந்த செயற்பாட் டிற்கு வழி வகுக்குமாறு வேண்டுகிறோம்.

கடந்த கால நிர்வாகங்களின் செயற்பாடுகள் உலகறிந்தவை அவை இடைநடுவில் நிறுத்தப் பட்டுள்ளன. (ஆசிரியர் கொடுப் பனவு, நீர்த்தாங்கிகளுக்கான கொடுப்பனவு) இதனைக் கருத் தில் கொண்டு உடனடியாக ஒன்றியத்தை செயற்படுத்து மாறும் கேட்டுக் கொள்கின்றோம். தற்போதைய நிர்வாகத்தின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற் கின்றோம்.

எனவே காலம் தாழ்த்தாது மாசிமாத இறுதியில் புதிய நிர்வாக சபையை எதிர்பார்ப்ப தாகவும் அவர்கள் தெரிவித்துள் ளனர்.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

வவுனியா நகர்ப்பகுதியில் டெங்கு நுளம்பு பெருகும் இடமென அடையாளம் காணப் பட்ட பகுதிகளில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசேட வேலைத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை விசேட அதிரடிப்படை, பொலிஸார் இணைந்து மேற்கொண்ட இப் பணியில் வவுனியா நகர்ப் பகுதியில் அமைந்துள்ள வடி கால்கள் துப்புரவு செய்யப் பட்டன.

நடைபாதை வியாபாரிகள் பயன்படுத்தும் பொலித்தீன்கள், வடிகால்களில் தேங்குவதனா லேயே நுளம்பு பெருக்கம் ஏற்பட்டுள்ளதாக வவுனியா நகரசபை சுகாதாரப்பிரிவு உத்தி யோகத்தர்கள் தெரிவித்தனர்.

இதன்போது, வடிகால்களை மூடி அமைக்கப்பட்ட சீமெந்து கற்கள் அகற்றப்பட்டு வடி கால்கள் துப்புரவு செய்யப் பட்டமை குறிப்பிடதக்கதாகும்.

# இரத்ததான முகாம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்பட்ட இரத்த தட்டுப்பாட்டை நீக்குவதற்காக வல்வெட் டித்துறை முச்சக்கரவண்டி சங்கத்தினரின் அவசர ஏற்பாட்டில் வல்வை சந்தியில் அமைந்துள்ள மத்திய பேருந்து நிலையத்தில் அண்மையில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

இவ் இரத்ததான முகாமில் 39பேர் வரை இரத்ததானம் வழங்கினர். இது பிற்பகல் 01.00 மணி வரை நடைபெற்றது

# ஆயுர் வேதம்

## காது கேட்கும் திறன் அதிகமாக..!



மூளையிலிருந்து காதுப் பகுதிக்கு கேட்கும் ஒலியை கிரகித்துக் கொள்வதற்கும், அந்த ஒலியை அர்த்தமாக புரிந்து கொள்வதற்குமான செயற்றிறனையும் பெற்றுள்ள நரம்புகள், ஏறிடும் வயோதிபத்தில் வாயுவின் வறட்சி எனும் குணத்தினால் தொய்வடைய வாய்ப்பிருக்கிறது.

நரம்புகள் தொய்வடையாமல் இருப்பதற்காக நம் முன்னோர் தலைக்கும், செவிக்கும் எண்ணெய்ப் பசையை உருவாக்கிக் கொள் ளும் வகையில் நல்லெண்ணெய்யை மிளகு, சீரகம், ஓமம், வெற்றி லைக்காம்பு, பூண்டு ஆகியவற்றை ஓர் இரும்புச் சட்டியில் சூடாக்கி பொறுக்கும் சூட்டில் அதாவது வெதுவெதுப்பாக எண்ணெய்யை மட்டும் ஒரு பஞ்சினால் முக்கி எடுத்து விட்டுக் கொள்வதை ஒரு முக்கிய செயலாக வைத்திருந்தனர்.

சுமார் 5 அல்லது 10 நிமிடங்கள் வரை இந்த காதினுள் விடும் எண்ணெய் வெளியே வழிந்துவிடாமல் இருப்பதற்காக எந்தப் பகுதியில் விட்டுக் கொண்டனரோ அந்தப் பகுதிக்கு எதிர்ப்பகுதியில் தலையைச் சாய்த்து அசையாதவாறு பார்த்துக் கொள்வர். அதன் பிறகு அன்றோ அல்லது மறுநாள் காலையோ அந்த எண்ணெய்ப் பசையை அகற்றிக் கொள் வதற்காக பஞ்சினால் துடைத்துவிடுவர்.

மறைந்துபோன இந்த உயர்ந்த சிகிச்சைமுறையை மறுபடியும் அது போன்ற பிரச்சினையுள்ளவர்கள் குறிப்பாக முதியவர்கள் அனுசரிக்கத் தொடங்கினால் பலவகையான காதைச் சுற்றிய நரம்பு உபாதைக ளிலிருந்து விடுபடலாம் என்பது மட்டுமல்ல, கேட்கும் திறன் குன்றாமலும் பாதுகாத்துக்கொள்ளலாம்.

தலைப்பகுதிக்கு ஆயுர்வேத மூலிகைத் தைலங்களாகிய க்ஷீரபலா, கார்பாஸாஸ்த்யாதி, பலாஹடாதி போன்றவற்றில் ஒன்றை லேசாகச் சூடாக்கி ஒரு பஞ்சில் தோய்த்து எடுத்து தலையில் சுமார் அரை முக்கால் மணிநேரம் பொதிந்துவைக்கும் சிகிச்சைமுறையால் தலைப் பகுதியிலுள்ள நரம்புமண்டலமானது நெய்ப்பு எனும் குணத்தைப் பெறுவ தாலும், வறட்சி எனும் வாயுவின் குணம் நீங்குவதாலும், அங்கிருந்து கீழாக இறங்கி உறுப்புகளைச் சென்றடையும் தறுவாயில் நரம்புகளில் செய்தி பரிமாற்றமானது தங்குதடையில்லாமல் நடை பெறுவதற்கு அதுவே காரணமாக அமைகிறது.

மூக்கில் எண்ணெய் அல்லது உருக்கிய நெய்யை விட்டுக் கொள் ளும் சிகிச்சைமுறைக்கு நஸ்யம் என்று பெயர். காதினுடைய நரம்பு களை வலுப்படுத்தக்கூடிய க்ஷீரபலா101 எனும் நெய் மருந்தை நீராவி யில் உருக்கி இரண்டு, நான்கு சொட்டுகள் காலையில் பல் தேய்த்த பிறகு விட்டுக்கொண்டு மெதுவாக உறிஞ்சி அந்த நெய்மருந்தானது வாய்ப்பகுதிக்கு வந்தவுடன் துப்பிவிடும் முறையால் இத்தகைய உபா தைகளுக்கு ஒரு தீர்வாக அது அமையக்கூடும்.

வாயினுள் அரிமேதஸ் எனப்படும் தைல மருந்தை சுமார் ஐந்து மில்லி லீற்றர் விட்டுக்கொண்டு சிறிது நேரம் வாயில் வைத்துக் கொப் பளித்துத் துப்பும் சிகிச்சை முறையால் காதினுள் உள்ள நரம்புகளை நம்மால் வலுப்படுத்த முடியும்.

கண்களில் விட்டுக்கொள்ளும் நயனாம்ருதம், நேத்ராம்ருதம் போன்ற எண்ணெய் சிகிச்சைமுறையாலும் தலைப்பகுதியைச் சார்ந்த உட்புற அழுக்குகள் நீங்குவதால் நரம்புகளில் ஏற்படும் தொய்வானது மேற் குறிப்பிட்ட நெய்ப்பு சிகிச்சைகள் மூலம் வலுப்படும்.

இப்படியாக தலையைச் சார்ந்த புலன்களில் நாம் ஏற்படுத்தும் நெய்ப்பானது அப்பகுதிகளில் உள்ள வறட்சியைப் போக்குவதால் மூளையைச் சார்ந்த பலவிதமான உபாதைகளுக்கும் ஒரு சிறப்பான தீர்வை ஏற்படுத்தித் தரும்.

இந்துகாந்தம் க்ருதம், விதார்யாதி க்ருதம், கல்யாணக க்ருதம் போன்ற ஆயுர்வேத மூலிகை நெய்மருந்துகள் வயோதிபத்தில் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியைக் குணப்படுத்தும் சிறந்த மருந்துகள். இம் மருந்து களை லேசாக உருக்கிச் சாப்பிட்டு மேலே சிறிது வெந்நீர் சாப்பிடுவது ஆரோக்கியம். இம்மருந்துகளின் அளவு, சாப்பிடவேண்டிய முறை, காலம் ஆகியவற்றை மருத்துவர் ஆலோசனைப்படி சாப்பிடுவது உசிதம்.

தவிர்க்கப்பட வேண்டியவற்றில் குளிர்ந்த தண்ணீரில் தலை தோய்ந்து குளிப்பது, இரவில் தலையில் தேங்காய் எண்ணெய்யைத் தடவிக் குளிரூட்டப்பட்ட அறையில் படுத்து உறங்குதல், உணவில் வறட்சி குளிர்ச்சி தரும் பண்டங்களைப் புசிப்பது, அதிக அளவில் காரம், கசப்பு, துவர்ப்புச் சுவையை உண்பது போன்றவையாகும்.

# சர்வதேசத்தை திருப்திப்படுத்த நீதித்துறையை சீரமைக்கவேண்டும்



சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த நீதித்துறையை செம்மைப்படுத்த வேண்டியது அவசியம் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நீதிமன்றக் கட்டமைப்பு ஒழுங்காகவும் கிரமமாகவும் காணப்படுகின்றது என்பதனை உலகிற்கு உணர்த்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நதிமன்றம் சுயாதீனமாகவும், பக்கச்சார்பற்றதாகவும் இயங்குவதனை உறுதி செய்வதன் மூலம் சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விவகாரங்களை இலங்கை சிறந்த முறையில் கையாள்கின்றது என்பதனை நிரூபிக்க வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் மனித உரிமை விவகாரங்கள் குறித்த உள்ளக விசாரணைப் பொறிமுறைமையை மேற்கொள்ள இலங்கை தகுதியானது என்பதனை உலகிற்கு உணர்த்த முடியும் என தெரிவித்த அவர் இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணைகள் பூர்த்தியாகும் நிலையில் காணப்படுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளின் மூலம் இலங்கை படையினர் மற்றும் சிவிலியன்கள் சர்வதேச நீதிமன்றில் ஆஜராகக் கூடிய நிலைமை உருவாகக்கூடும் என அவர் எச்ச ரிக்கை விடுத்துள்ளார்.

நீதிமன்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதன் மூலம் இந்த ஆபத்துக்களிலிருந்து மீள முடியும் எனவும், கடந்த அரசாங்கம் நம்பகமான உள்ளக விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை உருவாக்கத் தவறியமையே சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட ஏதுவாக அமைந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

இன சமூகங்களுக்கு இடையிலான காயங்களை ஆற்றி நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் சர்வதேச விசாரணைகளை தவிர்க்க முடியும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என சுட்டிக் காட்டியுள்ளதோடு, நம்பகமான பக்கச்சார்பற்ற உள்ளக விசாரணைப் பொறிமுறைமை ஒன்று துரித கதியில் உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாகரிகமடைந்த உலகில் ஏனைய நாடுகள் அனுபவித்து வரும் உரிமைகள் வரப்பிரசாதங்களை இலங்கையும் அனுபவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவை எழுந்துள்ளதாகவும், புதிய பிரதம நீதியரசரின் நிர்வாகத் தின் கீழ் சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்பட சாத்தியங்கள் உண்டு எனவும்,

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் சர்வதேச சட்ட நியதிகளுக்கு புறம்பாகச் செயற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இன்று பலர் உரிமை கோருகின்றனர்

### என்கிறார் கிரியெல்ல



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இன்று பலர் உரிமை கொண்டாடுகின்றனர் என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடக மொன்றுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே எங்கள் தலைவர், அவரே எங்கள் ஜனாதிபதி என இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கூறி வருகின்றனர்.

எனினும் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவை இவர்கள் கடுமையாக தூற்றியிருந்தனர்.

தேர்தல் காலத்தில் ஆர்.ஏ. சிறிசேன என்ற வேட்பாளருக்கே சுதந்திரக் கட்சி ஆதரவளித்தது.

ஜனாதிபதிப் பதவியில் அமர வைத்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அநீதி இழைக்க மாட்டார் என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

# பிரதம நீதியரசராக மொஹானை ஏற்றுக்கொள்ளாத ஜே.வி.பி.

மொஹான் பீரிஸை பிரதம நீதியரசராக ஏற்றுக்கொள்ளவில்லை என ஜே.வி.பி. கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கமொன்று பதவி ஏற்றுக்கொண்ட உடன், பிரதம நீதியரசர் ஒருவர் பணியில் அமர்த்தப்படும் முறைமைக்கு நாம் உடன்படவில்லை.

எனினும், மொஹான் பீரிஸ் ஓர் பிரதம நீதியரசர் கிடையாது. இதனால் மொஹான் பீரிஸ் விலக்கப்பட்டமையை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

கடந்த அரசாங்கம் அரசியல் அமைப்பிற்கு முரணான வகையில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை அதிகாரத்திலிருந்து விலக்கியது.

இதன் ஊடாக ஷிராணிக்கு கடுமையான அநீதி இழைக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளின் பின்ன ரேனும் அன்று ஏற்பட்ட தவறை புதிய அரசாங்கம் திருத்திக் கொண்டமையை நாம் வரவேற்கின்றோம்.

நாடாளுமன்றின் உன்னத தன்மையை கடந்த அரசாங்கமே இழிவுபடுத்தியது. ராஜபக்ச அரசாங்கமே அன்று நீதிமன்றின் சுயாதீனத்தன்மைக்கு தடை ஏற்படுத்தியது.

நாடு முழுவதிலும் மெதமுலன மகிந்த ராஜபக்ஷ சட்டங்களே காணப்பட்டன. ரத்துபஸ்வல பிரதேசத்தில் என்ன நேர்ந்தது?



தமக்கு நெருக்கமான ஒருவரை பிரதம நீதியரசராக நியமித்து கடந்த அரசாங்கம் சட்டத்தை கையில் எடுத்து பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டது.

மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதனைப் போன்றே, அவரது காலத்தில் இடம்பெற்ற சட்ட விரோத நடவடிக்கைகள் மற்றும் ஒழுக்க விரோத செயற்பாடுகள் குறித்து விசாரணை நடத்த விசேட ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட வேண்டுமெனவும் விஜித ஹேரத் நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சிறைக் கைதிகள் இன்று விடுதலை

வழமைபோன்று இம்முறையும் சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறைக் கைதிகள் சிலர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர். சிறை வைக்கப்பட்டுள்ள 75 வயதிற்கு மேற்பட்டவர்கள் இன்று விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறு குற்றங்களில் சிறை வைக்கப்பட்டுள்ளவர்கள், அபராதம் செலுத்த முடியாதவர்கள் இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர்.

மேலும் தற்போது சிறைத்தண்டனை பெற்றுள்ளவர்களின் சிறைத் தண்டனைக் காலத்தில் ஒரு வாரத்தை குறைப்பதற்கும் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 24 மணிநேர சேவையில் சுங்கத் திணைக்களம்

(கொழும்பு)

நிதியமைச்சின் ஆலோசனைக்கமைய சுங்கத் திணைக்களம் 24 மணிநேர சேவையை ஆரம்பித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் இச்சேவை நடைமுறைக்கு வந்துள்ளது. இதனடிப்படையில் 24 மணிநேரமும் சுங்கத் திணைக்களத்திடமிருந்து பொருட்களைப் பெறமுடியும்.

வாடிக்கையாளர்கள் விரைவில் தமது பொருட்களை சுங்கத் திணைக்களத்திடமிருந்து மீட்டுக்கொள்ளும் வகையில் இந்நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டது என நிதியமைச்சு தெரிவித் துள்ளது.

# வெளிநாடுகளில் பதுக்கிய பணம் மீட்பதற்கு உதவும் இந்தியா

இலங்கையின் முன்னைய ஆட்சியாளர்களினால் வெளிநாடுகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள பெருந்தொகைப் பணத்தை மீட்பதற்காக நிதி புலனாய்வுப் பிரிவொன்றை உருவாக்குவதற்கு இந்தியா இலங்கைக்கு உதவி வழங்கவுள்ளது.

இது தொடர்பாக இந்தியாவின் "எக்கனமிக்ஸ் டைம்ஸ்" குறிப்பிட்டுள்ளதாவது மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் வெளிநாடுகளில் மறைத்துவைக்கப்பட்டுள்ள பல பில்லியன் டொலர் பணத்தை மீட்பதென்று தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இலங்கையின் புதிய அரசாங்கம் உறுதியாக உள்ளது.

இதற்காக நிதிபுலனாய்வுப் பிரிவொன்றை அமைப்பதற்காக புதிய அரசாங்கம் மோடி அரசாங்கத்தை உத்தியோகப்பற்றற்ற முறையில் நாடியுள்ளது. உத்தியோகபூர்வ வேண்டுகோள்களை விரைவில் சிறிசேன அரசாங்கம் முன்வைக்கலாம். இந்தியாவில் காணப்படும் நிதி புலனாய்வு அமைப்பின் பாணியிலேயே இலங்கை அமைப்பு உருவாக்கப்படும்.

இந்திய நிதியமைச்சு இது குறித்த தனது அனுபவங்களை கொழும்புடன் பகிர்ந்துகொள்ளும் என அதிகாரிகள் தெரிவித்தனர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெலே சுதா மீதான விசாரணை ஒரு வாரத்தில் முடிக்க பணிப்பு

(கொழும்பு)

போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பாக் கைதாகியுள்ள வெலே சுதா என்றழைக்கப்படும் சமந்தகுமார விதானகே தொடர்பான அனைத்து விசாரணைகளையும் ஒரு வாரத்தினுள் முடிக்குமாறு பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர அறிவுறுத்தல் விடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் பிரபல அரசியல்வாதி ஒருவரின் பெயர் உட்பட தொடர்புடைய 30 பேரின் விபரங்களை வெலே சுதா வெளியிட்டுள்ளதுடன் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் போதைவஸ்து ஒழிப்புப் பிரிவு (நாகொடிக்) கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் புஜித ஜயசுந்தரவின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வருவதற்கு பொலிஸ் மா அதிபர் என்கே.இளங்கோன் உத்தரவிட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வெலே சுதா ஏற்கனவே கொழும்பு மாவட்ட எம்.பி. ஒருவரின் பெயரை குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் ஏன் இன்னும் அவர் பொலிஸாரினால் கைது செய்யப்படவில்லை என செய்தியாளர் ஒருவர் கேட்ட போது. பெயரை வெளியிட்டார் என்பதற்காக அவரைக் கைது செய்ய முடியாது. கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டாலும் அவர் பிணையில் விடுதலை செய்யப்படுவார்.

அவ்வாறில்லாமல் வெலே சுதாவினால் வெளியிடப்படும்



அனைத்து நபர்கள் தொடர்பாகவும் பெறப்படும் தகவல்கள் திரட்டப்பட்டு குற்றவாளிகளென நிரூபிப்பதற்கான அனைத்து ஆதாரங்களும் திரட்டப்பட் பின்னரே அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

# புலமைப் பரிசில், உயர்தரப்பரீட்சை திகதிகள் அறிவிப்பு

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிக்கப் பட்டுள்ளன.


இதன்படி ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி புலமைப் பரிசில் பரீட்ச்சை நடைபெறவுள்ளது.

கல்விப்பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை ஆகஸ்ட் 4 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

32) கண்ணாடி முன் பார்க்கும் போது மாற்றமின்றி தெரியும் எழுத்துக்களை கொண்ட அடைப்பு யாது?

1) MOH 2) PSM 3) AET


33) 60ஆம் ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் வைரவிழாவைக் குறிக்கும் இன்னொரு சொல்
1) பொன்விழா 2) அமுதவிழா 3) மணிவிழா

34)  உருவில் உள்ள சதுரமுகி குற்றிகளின் எண்ணிக்கை யாது?
1) 14 2) 10 3) 12

35) கவலைப்படாதீர்கள் நடந்தது நடந்துவிட்டது. எல்லாம் நன்மைக்கே தான் என்று மனதைத்திடப்படுத்திக் கொள்ளுங்கள் தோல்விதான் வெற்றிக்கு முதற்படி, நாங்கள் எல்லோரும் உங்கள் அருகில் இருக்கும் போது நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும். தைரியமாக இருங்கள். இதனை குறிக்கும் உரு எது?



36) அம்மா நான்.... நான் பேனாவை தொலைத்து விட்டேன். அம்மா ......... இனிமேல் தொலைக்கவே மாட்டேன்.



37) ஆணி வேர், தாவரங்கள் அடங்கிய விடையை தெரிக
1) தென்னை, பனை, வேம்பு 2) மா, பப்பாசி, பலா 3) கமுகு, கித்துள், பூவரசு

38) எனது அக்கா ரேவதி, ரேவதியின் தங்கை மேனகா இதன்படி எனது தங்கை மேனகா என்பது
1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது

39ஆம், 40ஆம் வினாக்களில் தரப்பட்ட சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றும் உணர்த்தும் தனிச்சொல்லை தெரிந்து கோடிடுக

39) ஆறு கடலுடன் கலக்கும் இடம்
1) கழிமுகம் 2) துறைமுகம் 3) தொடுவானம்

40) இலைகுழைகளால் வேயப்பட்ட குடிசை
1) பண்டகசாலை 2) நூதனசாலை 3) பன்னசாலை

எண்களின் தொடரையும், எழுத்துக்களின் தொடரையும் பரிசீலனை செய்து கீழே தரப்பட்ட அறிவுறுத்தல் களுக்கு ஏற்ப செயற்படுக

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 2 | 9 | 5 | 1 | 8 | 3 | 9 | 2 | 3 | 5 | 4 |
| ம | ய | உ | அ | க | த | ம | இ | ய | ர | எ | க | ய |

41) இரட்டை எண்களை சுற்றி வட்டமிடுக
42) 3ஆவது தடவையாக வரும் இலக்கம் 3 இன் கீழ்க் கோடிடுக
43) உயிர் எழுத்துக்களின் மீது புள்ளடி (X) இடுக
44) இரண்டாவது தடவையாக வரும் இலக்கம் 2ஐயும் "ம" என்ற எழுத்தையும் ஒரு கோட்டினால் இணைக்கவும்

சரியான விடையின் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக
45) இலங்கையின் பல பிரதேசங்களில் ஆறுகளும், அருவிகளும் வற்றிக்கொண்டு வருகின்றன
1) மரங்களை மக்கள் வெட்டி வீழ்த்துகின்றமை
2) விவசாயத்துக்கு அதிக நீரை பயன்படுத்துகின்றமை (......)
3) ஆற்று நீரில் கழிவுகள் கலக்கின்றமை




## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015


பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



கீழே தரப்பட்டுள்ள மூன்று படங்களில் இரண்டு ஏதோ வகையில் ஒத்தவை. ஒன்று வேறுபாடானது. வேறுபாடுடைய உருவின் கீழ் கோடிடுக


01) 
(1) (2) (3)

02) 
(1) (2) (3)

3ஆம், 4ஆம் வினாக்களில் முதலிரு சொற்களின் தொடர்பை அவதானித்து மூன்றாவது சொல்லுடன் தொடர்புடைய சொல்லின் கீழ் கோடிடுக.

03) தென்னை - பிள்ளை, பனை - 1) நாற்று 2) வடலி 3) கன்று


04) நரி - ஊளையிடும், மயில் - 1) ஆடும் 2) கூவும் 3) அகவும்

05)  இங்கு அதிகளவில் காணப்படுவது?
1) சதுரங்கள் 2) வட்டங்கள் 3) முக்கோணங்கள்

06)
$$\begin{array}{r} 5\ 2\ 4 \\ +\ 3\ 4\ A \\ \hline 8\ 7\ 3 \end{array}$$
A இடத்துக்கு வரவேண்டிய இலக்கம் யாது?
1) 05 2) 08 3) 09


07) விடுப்பு அடுப்பு தடுப்பு உடுப்பு இந்த சொல் வரிசையில் சேர்க்கக்கூடிய சொல் யாது?
1. இடுப்பு 2. பருப்பு 3. கரும்பு

08) 0.5 பங்கு நிழற்றப்பட்ட உருவை தெரிந்து கோடிடுக



1. 2. 3.

09)................. IX ............. தரப்பட்ட உரோமன் இலக்கத்திற்கு முன்னாலும் பின்னாலும் வரும் எண்கள்
1) IX,XIII 2) VIII,X 3) IV,X

10) மீனவன் பயன்படுத்தும் உபகரணத்தை தெரிந்து கோடிடுக

1.  2.  3. 

கீழேயுள்ள கணிதசெய்கைகளை அவதானித்து 11ஆம்,12ஆம் வினாக்களுக்கு விடை தருக




11) □ இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 5 2) 9 3) 6

12) ✡ இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 9 2) 2 3) 5

13) எழுத்துப்பிழையற்ற வாக்கியத்தை தெரிந்து கோடிடுக
1) குறிப்பிட்ட பருவத்தில் அதிக மழை பெய்யும்
2) சூளலை சுத்தமாக வைத்திருப்போம்
3) விமானம் வின்னை நோக்கி விரைந்தது

14) ஆறு கால்களை கொண்ட பிராணிகள் அடங்கிய விடையை தெரிக
1) தேனி, இறால், வண்ணத்துப்பூச்சி
2) உண்ணி, சிலந்தி, வீட்டுஈ
3) தேனி, தும்பி, நுளம்பு



15) 31 நாட்களை கொண்ட மாதங்கள் எவை?
1) ஜனவரி, மே, ஆகஸ்ட்
2) ஏப்ரல், யூலை, டிசம்பர்
3) மார்ச், செப்டெம்பர், நவம்பர்

16) 
A வட்டம் மாணவர்களையும் B வட்டம் ஆண்பிள்ளைகளையும் குறிக்கிறது எனின் C வட்டம் குறிப்பது
1) உயரமான பெண்பிள்ளைகள் 2) பெண் பிள்ளைகள் 3) சிறுவர்கள்

17) 
இக்குறியீடு குறிப்பது
1) இலங்கை மின்சாரசபை
2) மக்கள் வங்கி
3) ஸ்ரீலங்கா ரெலிக்கொம்

18) கடிகாரம் ஒன்று மணியைக்காட்டுகிறது. இதில் நிமிடமுள் வடக்குதிசையை காட்டுகிறது. எனின் மணித்தியால முள் காட்டும் திசை யாது?
1) தெற்கு 2) மேற்கு 3) கிழக்கு

19) தரப்பட்ட கடிகார முகங்களில் சரியான நேரத்தை காட்டும் கடிகார முகத்தை தெரிவு செய்க

1)  2)  3) 

20ஆம், 21ஆம் வினாக்களில் உள்ள இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை தெரிந்து கோடிடுக

20) கடலுக்கு மீன் போல ஆகாயத்துக்கு
1) நட்சத்திரம் 2) சூரியன் 3) சந்திரன்




21) கரும்புக்கு சீனி போல பனைக்கு
1) வினாகிரி 2) கருப்பப்பட்டி 3) சந்திரன்

கீழே உள்ள உருக்களுக்கு சொற்கள் வழங்கப்பட்டுள்ளன




இதற்கேற்ப உருக்களுக்கு பொருத்தமான வாக்கியம் எழுதுக

22) 

23) 



தரப்பட்ட பந்தியை வாசித்து 24 - 26 வரையான வினாக்களுக்குரிய விடையின் கீழ் கோடிடுக

மாலை வேளையில் ....A ... வானில் கதிரவன் மெல்ல மெல்ல மறையத் தொடங்கினான். .....B..... தேடச்சென்ற பறவைகள் தமது இருப்பிடங்களை நோக்கி விரைந்தன. .....C.... மலர்கள் முகம் மலர்ந்து மாலைப்பொழுதை வரவேற்கின்றன.

24) இடைவெளி A இற்கு பொருத்தமான சொல்
1) கிழக்கு 2) மேற்கு 3) தெற்கு

25) இடைவெளி B இற்கு பொருத்தமான சொல்
1) இரை 2) குஞ்சுக்களை 3) கழங்களை

26) C இடைவெளிக்கு வரவேண்டிய சொல்லை தெரிக?
1) தாமரை 2) கடுபுல் 3) அல்லி

27) 
கட்டடத்தில் இல்லாத வடிவத்தை தெரிவு செய்க
1)  2)  3) 


28) கோலத்தை அவதானித்து -?- இக்குறி இடப்பட்ட இடங்களுக்குள் வரவேண்டிய இலக்கத்தையும், ஆங்கில எழுத்தையும் குறிக்கும் விடையை தெரிக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 10 | 15 | ? |
| A | C | E | G | I | ? |

1) 20,J 2) 21,K 3) 24,L


29) 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் திகதி புதன்கிழமை எனின் ஏப்ரல் 13ஆம் திகதி என்ன கிழமை?
1) புதன்கிழமை 2) சனிக்கிழமை 3) செவ்வாய்க்கிழமை

30) இலங்கைக்குரித்தான முலையூட்டியை தெரிந்து கோடிடுக

1)  2)  3) 

31) சிறகுகளுக்கு பதிலாக உரோமங்களை கொண்ட பறவை எது?

1)  2)  3) 



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா நேற்று முன்தினம் வெகுசிறப்பாக இடம்பெற்றபோது.. (48)

# மக்களின் ஒத்துழைப்பின்மையால் நீர் வழங்கல் செயற்பாடு நிறுத்தம்

(ஏழாலை)

ஏழாலை J/206 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள இடங்களில் வலி.தெற்கு பிரதேச சபையினால் பவுசர் மூலம் வழங்கப்பட்டு வந்த தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதுடன் இதற்கு மக்களின் ஒத்துழைப்பு இன்மையே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஏழாலை பிரதேசத்திலும் கிணற்று நீரில் கழிவு ஒயில் கலந்துள்ளதால் தண்ணீருக்காக கஷ்ரப்படும் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வலி. தெற்கு பிரதேச சபையினால் ஏழாலை பிரதேசத்தில் தண்ணீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டு பவுசர்கள் மூலம் நீர் நிரப்பப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஏழாலை J/206 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் தண்ணீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டுள்ளன.

ஆனால், வலி.தெற்கு பிரதேச சபையின் தண்ணீர் பவுசர்கள் அகலமாக காணப்படுவதால் J/206 கிராம உத்தியோகத்தர் பகுதியில் உள்ள சிவகுரு வீதிப் பகுதிக்குச் செல்ல முடியாதுள்ளதாகவும் இதனால் அந்த வீதியோர மரங்களை அகற்றுமாறும் மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அதனைத் துப்புரவு செய்வதறகு மக்கள் ஒத்துழைகக வில்லை என்பதால் அப்பகுதிகளுக்கு தண்ணீரை வழங்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தண்ணீர் வழங்குவதையும் நிறுத்தியுள்ளனர்.

இதனால் பாதிக்கப்படுவது பொது மக்கள் மட்டுமே என்பதனைக் கருத்திற்கொண்டு அப்பகுதியிலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து தண்ணீர் பவுசர் வருவதற்கு ஏற்றவகையில் பற்றைகளைத் துப்புரவு செய்து தண்ணீரைப்பெற ஒத்துழைக்க வேண்டுமென நலன்விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

# சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு விழா

கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலையத்தின் 36 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 07.02.2015 சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சனசமூக நிலையத்திற்கு அருகில் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவும் கலந்துகொள்ள உள்ளார்.

சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சிற்றம்பலம் துரைராசாவும் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட உள்ளதுடன் கலை நிகழ்வுகளும் நடாத்தப்பட உள்ளன. (90)

# கும்பாபிஷேகம்



(மன்னார்)

மன்னார் ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகம் கடந்த வெள்ளிக் கிழமை விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகி 1 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை கும்பாபிஷேகம் சிறப்புற இடம்பெற்றது. தொடர்ந்து வைரவப் பெருமான் இரத பவனியாக வலம் வந்து பக்தர்களுக்கு அருள் வழங்கினார். தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று வருவதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# 25 ஆயிரம் ரூபாவுக்கு வங்கியில் வேலை மோசடி செய்த மன்னார் இளைஞர்

## பொலிஸார் முறைப்பாடு

மன்னாரில் அபிலாசினி எனும் பெயரில் இளைஞர் ஒருவர் தனது முகவர்களின் ஊடாக க.பொ.த சாதாரண தரம், உயர் தரம் படித்த இளைஞர்களை அணுகி 25,000 ரூபா வாங்கியில் வேலை பெற்றுத் தருவதாகவும் கூறி உள்ளூரில் உள்ள பிரபலங்களை தனது உறவினர்கள் எனக் கூறியும் பணமோசடி செய்து ஏமாற்றியுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவரிடம் பணம் கொடுத்து ஏமாந்த 7 பேருக்கு 80000 ரூபாவை திருப்பி கொடுப்பதாக இவர் பொலிஸாரிடம் ஒப்புக் கொண்டுள்ளார்.

மேலும் வங்கியில் வைப்பிடப்பட்ட 10000 ரூபாய்க்கான பற்றுச்சீட்டு தம்மிடம் உள்ளதாகவும் ஏமாற்றப்பட்டவர்களின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாந்திபுரம், சௌத்பார் பகுதிகளில் இது போன்று இன்னும் பலர் உள்ளதாகவும் வடக்கு கிழக்கிலும் இதுபோல ஏமாந்த பலர் இருப்பதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ள போதிய கல்வித் தகைமை அற்ற குறித்த இளைஞன் மன்னார் நகரத்தில் பிரபல தேசிய பாடசாலையில் கற்பித்தல் பணியில் தான் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், முறைப்பாட்டாளருக்கு எதிராக 8 சாட்சிகளைக் கொண்டு சென்றபோதும் பொலிஸில் குற்றவாளி என அறியப்பட்ட பின்னும் அவர் பணத்தை திருப்பிக் கொடுப்பதாக கூறியவுடன் எந்த நடவடிக்கையையும் பொலிஸார் எடுக்கவில்லை எனவும், ஏமாற்று வேலை தொடர்ந்து நடப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

# அரச பரீட்சைகள் அட்டவணை பெப்ரவரி -2015

(யாழ்ப்பாணம்)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் அரச பரீட்சைகளில் இம்மாதம் நடைபெறவுள்ள பரீட்சைகளின் விபரம் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது,

| இல | விபரம் | திகதி | இடம் |
|---|---|---|---|
| 1) | கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான கணனி அறிவைச் சோதிப்பதற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை - 2014 (2015) | 07 | கொழும்பு |
| 2) | இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2015) | 14, 15 | நாடுமுழுவதும் |
| 3) | தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை 2014 (2015) | 21, 22 | கொழும்பு |
| 4) | சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் கணக்காய்வு பரீட்சகர் சேவையின் I ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களை இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இற்கு பதவியுயர்த்தும் போட்டிப் பரீட்சை - 2014 (2015) | 21, 22 | நாடுமுழுவதும் |
| 5) | வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வன வெளிக்கள உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2014 (2015) | 22 | நாடுமுழுவதும் |
| 6) | வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வன வெளிக்கள உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015) | 22 | கொழும்பு |
| 7) | கடற்தொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிறைவேற்று அலுவலர் தரத்திலான III ஆம் வகுப்பின் உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015) | 28 | நாடுமுழுவதும் |
| 8) | சட்டமா அதிபர் திணைக்களத்தில் சுருக்கெழுத்தாளர் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2015) (தொழில் பரீட்சை) | 28 | கொழும்பு |
| 9) | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி உயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2015) | 28 மார்ச் | கொழும்பு உட்பட 7 மாவட்டங்கள் |
| 10) | இலங்கை அதிபர் சேவையின் I, 2-I, 2 -II மற்றும் 3 ஆம் வகுப்புகளின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2014 (2015) | 28 மார்ச் | கொழும்பு |

# இந்திய - அமெரிக்க உறவால் சீனாவுக்கு பாதிப்பில்லை

## ஒபாமா தெரிவிப்பு



(வொஷிங்டன்)

இந்தியா அமெரிக்கா இடையே யான நட்புறவு மேம்பட்டு வருவது, சீனாவுக்கு அச்சுறுத்தலாக அமையாது. சீனாவின் வளர்ச்சியையும் நாங்கள் எதிர்நோக்கியுள்ளோம் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தெரிவித்தார்.

தனது இந்தியப் பயணத்தின்போது தனியார் தொலைக் காட்சிக்கு ஒபாமா பேட்டியளித்தார். அது தற்போது ஒளி பரப்பு செய்யப்பட்டது. அந்தப் பேட்டியில் ஒபாமா கூறியுள்ளதாவது, எனது 3 நாள் இந்திய பயணத்தினால் சீனாவுக்கு அச்சம் ஏற்பட்டதாக வெளியான அறிக்கைகள் எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

அமெரிக்க மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளின் நட்புறவை பலப்படுத்தி வருகிறேன். இதில் சீனா அச்சம் கொள்ள காரணம் எதுவுமில்லை. சீனாவில் அமைதி நிலவுவதையே நாங்களும் விரும்புகிறோம். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டேன். அப்போது சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்து ஆலோசனை நடத்தினேன். அந்தப் பயணம் மிகவும் வெற்றிகரமாக இருந்தது.

அதுபோலதான் இந்தியாவுக்கும் பயணம் மேற்கொண்டேன். தற்போதைய காலகட்டத்தில் நாடுகள் இடையே நட்புறவு மேம்பட வேண்டும். அது இரு நாடுகளுக்கும் சாதகமான, நன்மை தரக்கூடியதாக இருக்க வேண்டும்.

அனைத்து நாடுகளும், உலக மக்கள் அனைவரும் மேம்பட வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பம். அமெரிக்க மக்கள் நலனுக்காகவே செயற்படுகிறேன். அதற்காக மற்றொரு நாட்டை அழித்துத்தான் அதைச் செய்ய வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம் இல்லை. சீனாவின் வளர்ச்சியையும், அதன் அமைதியையும் அமெரிக்கா விரும்புகிறது

இந்தியாவுடனான நட்புறவு இயற்கையானதாகும். இது தனிப்பட்ட முறையில் நான் மட்டுமல்ல, அனைத்து அமெரிக்க மக்களும் உணர்ந்துள்ளனர். சீனாவைவிட இந்தியாவை ஒருபடி மேலேதான் வைத்துள்ளோம் இவ்வாறு ஒபாமா கூறினார்.

# பொருத்தப்பட்டது கைகள் இந்திய மருத்துவர்கள் சாதனை



சாலை விபத்தில் உயிரிழந்த இளைஞர் ஒருவரின் கைகள் ரயில் விபத்தில் இரு கைகளையும் இழந்த 30 வயது நபருக்கு கேரளாவில் நடந்த அறுவைச் சிகிச்சை மூலம் வெற்றிகரமாக பொருத்தப் பட்டுள்ளது.

உலக அளவில் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் நாடுகளில் இதுவரை 110 பேருக்கு கை மாற்று அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவில் முதன்முறையாக கொச்சியில் அம்ரிதா மருத்துவ விஞ்ஞானக் கழக மருத்துவமனையின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சைப் பிரிவின் தலைமை மருத்துவர் சுப்ரமணிய ஐயர் தலைமையில் மனு என்பவருக்கு கைமாற்று அறுவைச் சிகிச்சை நடந்துள்ளது.

20 மருத்துவர்களுடன் 16 மணிநேரம் நடந்த இந்த சிகிச்சையில், ரயில் விபத்தில் இழந்த இரண்டு கைகளையும் இவர் திரும்ப பெற்றுள்ளார்.

உலகச் செய்திகள்

# இலங்கை அகதி மாணவி ஓவியத்தில் சாதனை

(ராமேஸ்வரம்)



இலங்கை அகதி மாணவி, இந்தியாவில் மாநில ஓவியப் போட்டியில் இரண்டாமிடம் பிடித்து சாதனை படைத்தார்.

கடந்த 2009 இல், இலங்கையில் யுத்த அனர்த்தங்களால் தமிழகத்தில் அகதியாக தஞ்சமடைந்த திருகோணமலையை சேர்ந்த மாணவி சல்மியா, 16, மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள அரசு பள்ளியில் 6 ஆம் வகுப்பில் சேர்ந்தார். தற்போது, பிளஸ் 1 படிக்கும் சல்மியா, ஓவியத்தில் சிறந்த மாணவியாக திகழ்கிறார். இவர் கடந்த மாதம் மாவட்ட அளவில் நடந்த ஓவியப்போட்டியில் முதலிடம் பிடித்தார.

இவர் "மரம் நடுவோம், மழை பெறுவோம்" என்ற தலைப்பில், வேலூரில் நடந்த மாநில ஓவியப் போட்டியில், 2 ஆம் இடம் பிடித்து கல்வி அமைச்சரிடம் பரிசு பெற்றார். உலகில் சமாதானம், பசுமை புரட்சி பாதுகாத்திட மாணவி தீட்டிய ஓவியத்திற்கு பரிசு கிடைத்ததற்கு, பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பாராட்டியுள்ளார்.

# அரசின் செயற்பாடுகளை வெளிப்படுத்த ஊடகங்கள் முன்வரவேண்டும்

## அருண் ஜெட்லி தெரிவிப்பு

(புதுடெல்லி)

அரசின் செயற்பாடுகளை ஊடகங்கள் மூலமாக மக்களுக்கு தெரிவிப்பதில் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் முக்கிய பங்காற்ற வேண்டும் என நிதி, தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அருண் ஜெட்லி கூறினார்.

அரசின் திட்டங்கள், செயற்பாடுகள் மக்களிடம் சரியாக சென்றடைவதில்லை என்ற கருத்து நிலவியது. இதற்காக பயிலரங்கம் ஒன்றை தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் பத்திரிகை தகவல் மையம் (பி.ஐ.பி) நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மத்திய அமைச்சர்



அருண் ஜெட்லி பேசியதாவது

அமைச்சரவையில் உள்ள அனைவரும் ஊடகங்களுடன் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற கலையை அறியாதவர்களாக இருக்கலாம். நாம் ஊடகங்கள் மூலமாகத்தான் மக்களை தொடர்பு கொள்கிறோம்.

ஊடகங்கள் மூலமாகத்தான் நாம் வாழ்கிறோம். அதனால் ஊடகங்களை பயன்படுத்திக் கொள்ளும் திறமையை அமைச்சர்கள் மற்றும் அமைச்சகத்தில் உள்ள உயர் அதிகாரிகள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அரசின் திட்டங்கள் எவ்வாறு செயற்படுகிறது என்பதை மக்களுக்கு தெரிவிக்க, இது சம்பந்தமான தகவல்களை ஊடகங்களுடன் அடிக்கடி பகிர்ந்து கொள்ளவேண்டும். தகவல்களை ஊடகங்களுடன் பகிர்ந்து கொள்வதில் அரசு உயர் அதிகாரிகள் முக்கிய பங்காற்ற வேண்டும். இவ்வாறு அருண் ஜெட்லி பேசினார்.

# பொலிஸார் கொலை வழக்கு 183 பேருக்கு மரணதண்டனை

எகிப்தில் 13 பொலிஸார் கொல்லப்பட்ட வழக்கில் 183 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் அதிபராக இருந்த முகமது முர்சி பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

அதை எதிர்த்து அவரது கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் அது கலவரமாக மாறியது. அந்த கலவரத்தில் கெய்ரோவின் புறநகரான கெர்தசாவில் உள்ள பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. கலவரக் காரர்கள் நடாத்திய தீவிர தாக்குதலில் 13 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக 188 பேர் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டது. அவர்களில் 2 பேர் விடுதலை செய்யப்பட்டனர். மேலும் 2 பேர் இறந்தனர். இந்நிலையில் எஞ்சிய அனைவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் மைனர் என்பதால் அவருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படடது.

இந்த வழக்கில் 183 பேருக்கும் தூக்குத் தண்டனையை உறுதி செய்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இவர்களின் தண்டனை விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது.

# பாகிஸ்தான் ஏவுகணை சோதனை வெற்றி




(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில், முழுவதும் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட ஏவுகணையை, அந்நாட்டு விஞ்ஞானிகள் நேற்று முன்தினம் வெற்றிகரமாக சோதித்தனர்.

எதிரிப் படைகளை குறிவைத்து தாக்கும் வகையிலான ஏவுகணை தயாரிப்பு பணியில், பாக்., விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

அதன் ஒரு பகுதியாக, அணு ஆயுதங்களை தாங்கிச் சென்று, 350 கி.மீ., தொலைவிலான இலக்கை மிகத் துல்லியமாகத் தாக்கும் வகையிலான ஏவுகணையை பாக்., விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

"கடலிலிருந்து கப்பல் மூலம் செலுத்தும் வகையிலான இந்த ஏவுகணையின் உதவியால், தரை மற்றும் தண்ணீரில் எதிரியின் இலக்கை எளிதில் தாக்க முடியும்.

இவ்வகை ஏவுகணைகளை ஒரு சில நாடுகள் மட்டுமே பெற்றுள்ளன. அந்த வரிசையில் பாகிஸ்தானும் இணைந்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது" என, பாக்., விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# பன்றிக் காய்ச்சல் 49 பேர் உயிரிழப்பு

(ஜெய்பபூர்)



ராஜஸ்தான் மாநிலத்தில், பன்றிக் காய்ச்சல் வேகமாக பரவுகிறது. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 49 பேர், இந்த காய்ச்சலுக்கு பலியாகியுள்ளனர்.

ராஜஸ்தானில், முதலவர் வசுந்தரா ராஜேஷ் தலைமையிலான பா.ஜ., ஆட்சி நடக்கிறது. இங்கு, அஜ்மீர், ஜெய்ப்பூர், ஜோத்பூர், டோங்க் ஆகிய பகுதிகளில் பன்றிக்காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது.

நேற்று முன்தினம், இந்த நோய்க்கு, 10 பேர் பலியாயினர். இதையடுத்து, இந்தாண்டில் மட்டும், 49 பேர் இந்தக் காய்ச்சலுக்கு பலியாகியுள்ளனர். மேலும் பலர், நோய் அறிகுறியுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். பன்றிக் காய்ச்சல் மேலும் பரவாமல் தடுப்பதற்கு, சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# அத்திபாரம் உறுதியாக இருந்தால் வாழ்வில் வசந்தம் வீசும்"



(யாழ்ப்பாணம்)

வாழ்வில் இடம்பெறுகின்ற அனைத்துச்செயற்பாடுகளும் சரியான முறையில் வெற்றியளிக்க வேண்டுமேயானால் ஒவ்வொரு செயற்பாடுகளிற்கும் இடப்படுகின்ற அடித்தளங்களானது சரியான முறையில் இடப்பட வேண்டும்.

மாணவர்களின் கல்விப்பராயத்தில் அடித்தளமாக விளங்குவது முன்பள்ளிக் கல்வியே ஆகும். முன்பள்ளி சிறார்களை பல சவால்களிற்கு மத்தியில் அவர்களின் சிறுபராயத்தில் அவர்களிற்குத் தேவையான கல்வி கற்கும் வழிமுறைகளை மிகவும் நுணுக்கமான முறையில் சிறார்கள் கல்வியைக் கண்டு சுமையாக எண்ணாது விரும்பி கற்க வேண்டியவர்களிற்குரிய மன நிலையை இம் முன்பள்ளிக் கல்வியே போதிக்கின்றது என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

நேற்று கோப்பாய் தெற்கு கோப்பாயில் உள்ள மதுரம் மழலைகள் பூங்கா திறப்பு விழா மற்றும் கால்கோள் விழாவும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

எமது கட்சியினூடாக இம் முன்பள்ளி மாணவர்களிற்கு பூங்கா அமைப்பதற்காக நிதி வழங்கப்பட்டிருப்பினும், இனி வரும் காலத்திலும் முன்பள்ளி செயற்பாடுகளிற்கு கரம் கொடுப்போம் எனத் தெரிவித்ததுடன், இதுவரை காலமும் மக்களின் நல்வாழ்விற்காய் எவ்வாறெல்லாம் உழைத்ததோ அந்த உழைப்பு இனிவரும் காலத்திலும் தொடரும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற முன்பள்ளி பூங்கா திறப்புவிழா மற்றும் கால்கோள்விழா, கலைஞர் கௌரவிப்பு ஆகியவை இடம் பெற்றன. முன்பள்ளி தலைவர் கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் விமலநாதனும் கலந்து கொண்டார்.

# ஹக்கீமுடன் பிஸ்வால் சந்திப்பு நல்லாட்சிக்கு ஒத்துழைக்க விருப்பம்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை நேற்று மதியம் சந்தித்து கலந்துரையாடினார்.

அமைச்சர் ஹக்கீமின் இல்லத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் மு.கா. செயலாளர் நாயகமும் சுகாதார இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹசன் அலி, பிரதிச் செயலாளர் நாயகமும் கல்முனை முதல்வருமான எம்.நிஸாம் காரியப்பர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஆட்சி மாற்றத்தின் பின்னரான நாட்டு நிலைமைகள் குறித்து அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால், அமைச்சர் ஹக்கீம் உள்ளிட்ட மு.கா. பிரதிநிதிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

அதேவேளை நல்லாட்சிக்'காக' மேற்கொள்ளப்படவுள்ள அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் குறித்து அமைச்சர் ஹக்கீமின் வேண்டுதலின் பேரில் மு.கா. பிரதிச் செயலாளர் நாயகம் சட்டமுதுமாணி எம்.நிஸாம் காரியப்பர், அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வாலுக்கு விளக்கிக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நிஷா பிஸ்வால், இத்திட்டங்கள் நாட்டு மக்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதுடன் இலங்கையின் நல்லாட்சிக்கும் பொது நல விடயங்களுக்கும் அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் எனக் குறிப்பிட்டார்.

## யாழில்...

பிரிவுக்குள் அதிக குற்றச்செயல்கள் இடம்பெறுகின்றமை தொடர்பில் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனரா என அவரிடம் வினவியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், யாழ். பொலிஸ் பிரிவில் அண்மைக்காலங்களில் வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் பொதுமக்கள் 021 2222222 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல் தரமுடியும்.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக வங்கியில் பண வைப்பிலிட செய்து மோசடி செய்யும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. அவை தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். சரியான தகவல்களைப் பெற்றும் சரியான முறையில் வெளிநாட்டுக்கு செல்லும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றார்.

## காணாமற்...

வலியுறுத்தியும், இன, மத பேதமின்றி மக்கள் மீதும் பிரயோகிக்கப்படும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரியுமே இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவுடன் இணைந்து "நாங்கள்" அமைப்பின் ஏற்பாட்டில் காணாமற் போனோரின் உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## தனியார்...

குறித்து ஆராய்வதற்காக குழுவொன்றை நியமித்துள்ளதாகவும் நீதி மற்றும் தொழில் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இன்று...

நாடொன்றை கிடைக்க பிரார்த்திப்போம் என்று வேண்டிக் கொண்டு இந்த தீபத்தை ஏற்றுமாறு உள்விவகார அமைச்சு கோரியுள்ளது.

## தமிழர்...

கவனம் செலுத்தப்படவில்லை என நிஷா பிஸ்வாலிடம் எடுத்துரைத்ததாக சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

மீள்குடியேற்றம் உள்ளிட்ட வட, கிழக்கு மக்களின் அரசியல் தீர்வுக்கு உரிய ஆவணங்களை புதிய அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள போதும் அரசாங்கம் அதுகுறித்து விரைந்து செயற்படவில்லை என சுரேஷ் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமது கோரிக்கைகள் சரி என்று ஏற்றுக் கொண்ட பிஸ்வால் அரசாங்கத்திற்கு இது தொடர்பில் வலியுறுத்துவதாக உறுதி அளித்துள்ளார் என சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

## ரயிலுடன்...

காயமடைந்துள்ளார்.

இவ்வாறு மோதுண்ட உழவு இயந்திரத்தின் பெட்டி சேதமடைந்துள்ளதுடன், அது தூக்கி வீசப்பட்டதில் அருகில் உள்ள கடை மற்றும் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள் சிலவும் சேதமடைந்துள்ளன.

சட்டவிரோத முறையில் மணல் கொண்டுசென்ற உழவு இயந்திரமே இவ்வாறு விபத்தில் சிக்கியதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

(இ,02,25,11,66)

## தமிழர்களின்...

போது, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மாவட்டங்களுக்கான அமைப்பாளர்களும், கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அங்கு மேலும் உரையாற்றுகையில்,

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைக்காகவும், அபிவிருத்தி மற்றும் மக்களின் துயர் துடைப்பு பணிகளுக்காகவும் நாம் எமது மக்கள் மத்தியில் இடையறாது நீடித்து நின்று உழைத்து வருகின்றோம்.

எமது அரசியல் வரலாற்றில் பல்வேறு ஆட்சி மாற்றங்களை நாம் கடந்து வந்திருக்கிறோம். பலத்த சவால்களையும் உயிர் அச்சுறுத்தல்களையும் நாம் சந்தித்திருந்த போதிலும் எமது மக்களை கைவிட்டு எக்காலத்திலும் எங்கும் ஓடிப்போனவர்கள் அல்ல.

இதற்குக் காரணம் நாம் எமது மக்கள் மீது கொண்டிருக்கும் இடையறாத நேசிப்பும், நாம் கடைப்பிடித்து வந்திருக்கும் உறுதியான அரசியல் வழிமுறையுமே ஆகும்.

எம் மீதான அவதூறுகளை யார்தான் திட்டமிட்டு பரப்பினாலும் அந்த அவதூறுகள் யாவும் நாம் அடுத்த கட்டஅரசியல் செயற்பாட்டை நோக்கி செல்வதற்கான ஊக்க மருந்துகளே என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது நீடித்த ஆட்சியின் ஊடாகவே இங்கு மாற்றங்களை நிகழ்த்த முடியும் என்ற எமது உறுதி மொழியை ஏற்று கணிசமான மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

குறிப்பாக, வடக்கில் எமது வேண்டுகோளை ஏற்று வாக்களித்த மக்களின் தொகை கடந்த கால தேர்தல்களை விடவும் பல்லாயிரங்களாக பெருகியிருக்கிறது. இதை எமது கட்சிக்கு மக்கள் வழங்கிய நீடித்த அரசியல் அங்கீகாரமாகவே பார்க்க வேண்டும்.

ஆகவே எமது வேண்டுகோளை ஏற்று வர்க்களித்த மக்களுக்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

இதேவேளை ஆட்சி மாற்றத்தின் ஊடாகவே இங்கு அரசியல் மாற்றங்கள் நிகழும் என்ற நம்பிக்கையோடு வாக்களித்த மக்களும் எமக்கு விரோதமானவர்களோ, அன்றி எதிரானவர்களோ அல்ல. அவர்களும் எமது மக்களே. அவர்களது ஜனநாயக உணர்வுகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்.

வளைய மறுப்பது முறியும். வளைந்து கொடுப்பது மறுபடி நிமிரும்.

இந்த உண்மையுள்ள தத்துவத்தின் அடிப்படையில் நாம் விட்டுக்கொடுக்க வேண்டிய விடயங்களில் விட்டுக் கொடுத்தும், உறுதியாக இருக்க வேண்டிய விடயங்களில் உறுதியை வெளிப்படுத்தியும் வந்திருக்கிறோம்.

ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு என்பார்கள். அது போல் நாம் எத்தகைய சூழலின் போதும் எமது மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் எந்த வித விட்டுக்கொடுப்புகளுக்கும் இடமளித்திருக்கவில்லை.

எதிர்வரும் காலங்களில், நாம் எமது கட்சியின் சின்னமாகிய வீணைச்சின்னத்திலேயே போட்டியிடுவோம்.

இதை நாம் தீர்மானமாக எடுத்திருப்பது எமது மக்களின் ஒளிமயமானதொரு எதிர்காலத்திற்கான அறிகுறியே.

வீணைக்கு வழங்கும் ஆணையே விடிவை தரும் என்ற மக்களின் நம்பிக்கைக்கு உரமூட்டுங்கள்.

அகிம்சை வழியில் செயற்பட்ட தந்தை செல்வநாயகம் கூட தனக்கு பின்னர் தனது வழித்தோன்றல்களாக எவரும் வந்து எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பார்கள் என்று நம்பியிருந்திருக்கவில்லை.

ஆகவேதான் அவர் தனது இறுதிக்காலத்தில் தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்றுவார் என்று சொல்லி மறைந்திருக்கிறார். அது அவரது நம்பிக்கையாக இருக்கலாம். ஆனாலும் தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்றுவார் என்ற அந்த வார்த்தை தந்தை செல்வநாயகம் பெயரை இன்று உச்சரிப்பவர்களுக்கு உச்சந்தலையில் அன்றே விழுந்த அடி போன்றதே.

இங்கு யாரையும் நம்பி பயனில்லை. அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும். அது போல் தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமையினை வென்றெடுப்பதற்கான பாரிய கடமையை எமது கட்சியின் மீதே வரலாறு சுமத்தியிருக்கின்றது.

சுமக்கும் பாரம் அதிகம், ஆனாலும் இனி நடக்கும் தூரம் அதிகமில்லை. தொடர்ந்தும் மக்களிடம் செல்லுங்கள் மக்களின் நண்பர்கள் நாமே என்பதை மக்களுக்கு தொடர்ந்தும் உணர்த்துங்கள்.

கருத்து மக்களை பற்றிக்கொண்டால் அது மாபெரும் சக்தியாக உருவெடுக்கும் என்பதை மக்களுக்கு தொடர்ந்தும் தெளிவு படுத்துங்கள்.

சரியான கருத்துக்கள் வானத்தில் இருந்து விழுகின்றவை அல்ல.

அவை நடைமுறையில் இருந்தே எழுகின்றன. ஆகவே தொடர்ந்தும் மக்களிடம் இருந்து கற்றுக்கொள்ளுங்கள்.

இதுவரை நாம் பெற்றுக்கொண்ட அனுபவங்களும் அரசியல் உறுதியும் மக்களுடன் பேசி அவர்களிடம் இருந்து கற்றுக்கொண்டவைகளே.

விரைவில் நான் ஒவ்வொரு தொகுதிகள் தோறும் தேடி வந்து எமது கட்சியின் செயற்பாட்டாளர்களை சந்திப்பேன்.

அதே வேளை பிரதேசங்கள் தோறும் வந்து எமது மக்களையும் சந்தித்து பேசுவேன்.

மக்களின் கருத்துக்களை மேலும் கேட்டறிந்து காலச் சூழலுக்கு ஏற்றவாறு எமது கட்சியை நாம் செப்பனிட்டு செல்ல வேண்டும்.

அதன் மூலமே எமது அரசியல் இலக்கை நாம் இன்னமும் சுலபமாகவும் விரைவாகவும் எட்ட முடியும்.

எமது மக்களுக்கான அரசியலுரிமை பிரச்சினையை கடந்த கால தலைமைகள் அடுத்த சந்ததியினர் மீது சுமத்தி விட்டு சென்றது போல் நாமும் அடுத்த சந்ததியினர் மீது சுமத்தி விட்டு சென்று விட முடியாது.

இந்த தலைமுறையின் போதே அரசியலுரிமை பிரச்சினை முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும். எமது காலத்திலேயேஎமது இலக்கை எட்டி விட வேண்டும்.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் மாவட்டங்களின் அமைப்பாளர்கள் மத்தியில் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கட்சியின் கருத்துக்களை எடுத்துரைத்திருந்தார்.

இச்சந்திப்பின் போது கட்சியின் கடந்த கால, சமகால, மற்றும் எதிர்கால செயற்பாடுகள் குறித்து செயலாளர் நாயகம் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் ஆரோக்கியமான முறையில் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

# மாற்று வலுவுள்ள மாணவர்களுக்கு மாதாந்தம் போக்குவரத்து கொடுப்பனவு

(கொழும்பு)

பாடசாலையில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மாற்றுவலுவுள்ள மாணவர்களுக்கு போக்குவரத்து செலவு கொடுப்பனவாக மாதாந்தம் 750 ரூபாய் வழங்கப்படவுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் சி.பரந்தாமன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2015ஆம் ஆண்டின் வரவு-செலவுத்திட்ட பிரேரணையின் பிரகாரம் ஜனவரி மாதத்திலிருந்து இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

மாற்றுவலுவுள்ள மாணவர்களின் பெற்றோர்கள் இதற்குரிய விண்ணப்படிவத்தை தமது கிராம அலுவலரிடம் பெற்று, பூரணப்படுத்தி பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் கிராம அலுவலகரிடம் ஒப்படைக்க வேண்டும்.

கிராம அலுவலர் சிபாரிசு செய்து பிரதேச செயலக பிரிவு சமூக சேவைகள் அதிகாரியிடம் ஒப்படைப்பார். மாதத்தில் 15 நாட்களுக்கு பாடசாலைக்கு சமுகமளித்த 'மாற்றுவலுவுள்ள மாணவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

இதற்காக ஒவ்வொரு மாதமும் மாற்றுவலுவுள்ள மாணவர்களின் வரவு பாடசாலை அதிபர் ஊடாக உறுதிப்படுத்தப்படும்.

கொடுப்பனவைப் பெற்ற மாணவர் பாடசாலை கல்வியை இடைநிறுத்தினால் அல்லது வேறொரு பிரதேச செயலக பிரிவுக்கு இடம்மாறினால் கொடுப்பனவு நிறுத்தப்படும் என அந்தச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# முல்லையில் அழுங்கு



முல்லைத்தீவு வண்ணாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஒருவரின் வீட்டுக்குள் புகுந்துள்ளது அழுங்கு (Pangolin) எனப்படும் உயிரினம். அது என்ன என்று தெரியாத வீட்டு உரிமையாளர் அயலவர்களையும் அழைத்து கேட்டுள்ளார். அப்போதும் தெரியவராததால் பொலிஸாரிடம் காட்டியுள்ளனர்.

அப்போது பொலிஸார் அது அழுங்கு என்று தெரிவித்துள்ளனர். சுமார் 3 அடி நீளமான இந்த உயிரினம் பெயர் அறியப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் காட்டில் விடப்பட்டது

# வடக்கில் இருந்து சைக்கிள் பயணம்

இலங்கையின் 67ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் முகமாக நீவ் சிற்றி பின்னகுல நிட்டம்புவ பகுதியை சேர்ந்த நல்லகே கர்பட் பீரீஸ் (வயது-54) என்பவர் பருத்தித்துறை முனையிலிருந்து தெய்வேந்திர முனை வரையில் துவிச்சக்கர வண்டி பயணம் மேற்கொள்கின்றார்.

நேற்றுக் காலை 6.30 மணிக்கு பருத்தித்துறை சக்கோட்டை முனையிலிருந்து இவர் தனது துவிச்சக்கரவண்டி பயணத்தை ஆரம்பித்தார்.

இவருடன் உதவிக்குழுவொன்றும் செல்கின்றது. நாளை மாலை தெய்வேந் திரமுனையை சென்றடைவேன் என அவர் கூறினார்.

# சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்ட குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது.

நுணாவில் மத்தி பகுதியில் உள்ள மரம் ஒன்றில் இருந்து இந்தச் சடலம் நேற்று மீட்கப்பட்டது. கந்தசாமி தயாசீலன் (வயது-48) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். (இ)

# வெலிக்கடையில் திஸ்ஸ; நிமால் குழுவினர் பார்வை

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்கவை எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபாலடி சில்வா தலைமையிலான குழுவினர் நேற்று சென்று பார்வையிட்டனர்.

எதிர்க்கட்சி பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்க, பந்துல குணவர்த்தன, மஹிந்தானந்த அளுத்கமகே, லக்ஷ்மன் வசந்த பெரேரா மற்றும் லலித் திஸாநாயக்க ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர். போலி ஆவணங்களை தயாரித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் முன்னாள் சுகாதார அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்கவை, கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்று எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையிலும் நேற்று உறவுகள் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

கடத்தப்பட்டோர், காணாமற்போனோரை கண்டு பிடித்துத் தரக்கோரியும், சிறையில் வாடும் அரசியல் கைதிகளிடம் முறையான விசாரணை நடத்தி விடுதலை செய்ய வலியுறுத்தியும் திருகோணமலை உட்துறைமுக வீதி கலாசார மண்டபத்திற்கு முன்னால் உள்ள சிறுவர் பூங்காவில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தை 'நாங்கள்' அமைப்பு மற்றும் கடத்தப்பட்டோர், காணாமற் போனோர் உறவுகளின் அமைப்பு, திருகோணமலை மாவட்ட பெண்கள் சமாஜம், அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றியம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. இந்தப் போராட்டத்தில், திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், மூதூர் கிழக்கு, குச்சவெளி, தம்பலகாமம், கிண்ணியா, வெருகல், ஈச்சிலம்பற்று, பட்டினமும் சூழலும் எனப் பல பிரதேசங்களில் இருந்து தமது உறவுகளைத் தேடும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

புதிய அரசு இவ் விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும் என உறவுகளை இழந்தவர்கள் மன்றாடினார்கள்.

இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகர சபைத் தலைவர் க.செல்வராஜா, கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான கு.நாகேஸ்வரன், ஜே.ஜெனார்த்தனன், திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் செயலாளர் கனகசிங்கம் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். கடத்தப்பட்டோர், காணாமற்போனோர்களின் விவரங்களையும் நேற்றைய தினம் புதிதாகப் பதியப்பட்டவர்களின் தகவல்களையும் அடங்கிய மனு ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

# முல்லைத்தீவுக்கு புதிய பொலிஸ் அதிகாரி

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகர் வி.டபிள்யு. இந்திரஜித் (ஓ.ஐ.சி), முல்லைத்தீவு பொலிஸ் தலைமை காரியாலயத்துக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த இடம்மாற்றம் கடந்த திங்கட்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதே வேளை, மேலும் நான்கு பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கதிர்காமம் பொலிஸ் நிலையத் தலைமை பரிசோதகர் சந்திமா, அனுராதபுரம் பொலிஸ் நிலைய தலைமை காரியாலயத்துக்கும் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ஏ.ஜி.பி.புஸ்பகுமார, மின்னேரியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# சிகிச்சையில் அசமந்தம் மன்னாரில் போராட்டம்

(மன்னார்)

நிமோனியா காய்ச்சலுக்கு உள்ளான இளைஞன் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்தார். இளைஞரின் உயிரிழப்புக்கு வைத்தியர்களின் அசமந்த போக்கும், முறையான சிகிச்சை அளிக்கப்படாமையுமே காரணம் என்று தெரிவித்து நேற்றுக்காலை மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை மன்னார் பிரஜைகள் குழு ஏற்பாடு செய்திருந்தது. அண்மையில், நொச்சிகுளம் கிராமத்தை சேர்ந்த இளைஞன் நிமோனிய காய்ச்சலுக்கு உள்ளாகி மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்தார். இதனைக் கண்டித்தும், அண்மைக்காலமாக மன்னார் பொது வைத்தியசாலையில் வைத்தியர்களின் முறையற்ற நடவடிக்கைகள், மற்றும் வைத்தியசாலை வளாகம் துப்புரவு இன்றி காணப்படுவதால் ஏற்படும் அசாதாரண நிலைமைகளையும் குறிப்பிட்டே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

# கெஹலியவின் வீட்டில் மீட்கப்பட்ட பொருட்கள்

## விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெலவின் வீட்டிலிருந்து மீட்கப்பட்ட பொருட்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல்களை அடுத்தே கண்டி, புஸ்பதான மாவத்தையில் உள்ள அவரது வீட்டிலிருந்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கொழும்பு, கறுவாத்தோட்டம், கெப்பட்டிபொல மாவத்தையிலுள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்குச் சொந்தமான வீட்டிலிருந்து மூன்று லொறிகளில் பொருட்கள் கொண்டுசெல்லப்பட்டு கண்டியிலுள்ள வீட்டில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே அந்த பொருட்கள் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பொருட்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ர்ாஜபக்ஷவின் கையொப்பத்துடன் அவரது படம் தாங்கிய கோப்பைகளும் இருந்தன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மாணவர்களுக்கு நிதி வழங்கல்




(கிளிநொச்சி)

க.பொ.த (உ/த) பரீட்சையில் கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக, பிரிவுகளில் பத்து இடங்களை பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான கௌரவிப்பும், பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி வழங்கல் ஆரம்ப நிகழ்வும்

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையினால் 2014 க.பொ.த (உ/த) பரீட்சை எழுதிய கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த மாணவர்களின் ஒவ்வொரு பிரிவிலும் முதல் பத்து இடங்களை, பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான கௌரவிப்பும், பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி வழங்கல் ஆரம்ப நிகழ்வும் கடந்த மாதம் 31 ஆம் திகதி கிளிநொச்சி பழைய வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி, பேராசிரியர் சிவமதி சிவச்சந்திரன் கலந்து மாணவர்களுக்கு சிறப்பு கேடயமும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு சான்றிதழும் வழங்கி கௌரவித்தார்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்ட வலயக்கல்வி பணிப்பாளர் திரு. க.முருகவேல் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கினார். (90)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.